REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
தினகரன்

2023 செப்டெம்பர் 30 சனிக்கிழமை

வரு. 91 இல. 232 | Saturday 30, September, 2023 | 08பக்கங்கள்

நாட்டில் இரண்டு குழந்தைகளுக்கு

## 'நிபா' வைரஸ் பரவிய செய்தியில் உண்மையில்லை


### Dr. ஜி.விஜேசூரிய தெரிவிப்பு



இலங்கையில் 'நிபா' வைரஸால் பாதிக்கப்பட்ட இரு குழந்தைகள் அடையாளம் காணப்பட்டதாக தெரிவிக்கப் படுவது தவறான தகவலெனா, மருத்துவர் ஜி.விஜேசூரிய தெரிவித்தார். 06

ஸ்ரீபாத மலை ஏறும்

## பக்தர்களுக்காக இரு சிறப்பு பாதைகள்



சிவனொளி பாத மலை பருவ காலத்தில் மலை ஏறும் பக்தர்களுக்காக இரத்தினபுரி மற்றும் நல்ல தண்ணியில் புதிய பாதைகள் திறக்கப்பட்டுள்ளதாக, வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், இரத்தினபுரி வழித்தடத்துக்கான பவனல்ல பொலிஸ் சோதனைச் சாவடி அமைந்துள்ள இடத்திலும், நல்லதண்ணி வழித்தடத்துக்கான நல்லதண்ணி வனவிலங்கு பாதுகாப்பு அலுவலகத்திலும் அனுமதிச் சீட்டுக்கான கருமபீடங்கள் திறக்கப்பட்டுள்ளதாக, அத்திணைக்களம் தெரிவித்தது. 06

2022ஆம் ஆண்டை விட இலங்கையில்

## ரூபாவின் பெறுமதி தற்போது நிலையானதாக மாறியுள்ளது



2022ஆம் ஆண்டை விட இலங்கை ரூபாவின் பெறுமதி தற்போது நிலையானதாக மாறியுள்ளதென, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் இந்தியாவின் உதவி தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் சர்வதேச ஊடகமொன்றுக்கு தெரிவித்த போதே, இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டை விட நாட்டின் நிலைமை மிகவும் சிறப்பாக உள்ளதாகவும், அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். ரூபாவின் பெறுமதி நிலையானதாக மாறியுள்ளதுடன், கையிருப்பு உயர்ந்துள்ளது. சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்துள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியா 3.9 பில்லியன் மதிப்பிலான பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளதுடன், நாடென்ற ரீதியில் இந்தியாவுக்கு தாம் நன்றியுள்ளவர்களாக இருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

இன்று தாம் அடைந்துள்ள நன்மதிப்பில் பெரும் பகுதி இந்தியாவைச் சாருமெனவும் அமைச்சர் அலி சப்ரி மேலும் தெரிவித்தார்.

## கஸகஸ்தான் ஜனாதிபதியுடன் ஜனாதிபதி ரணில் சந்தித்து பேச்சு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் கஸகஸ்தான் ஜனாதிபதி கஸீம் ஜோமார்ட் டோகாயேவ் (Kassym Jomart Tokayev) ஆகியோருக்கு இடையிலான இரு தரப்பு பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் (28) ஜேர்மனின் பேர்லின் நகரில் நடைபெற்றது. 06



பயிற்சியாளர்களாக இணைத்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்திசார்

# பல்நோக்கு உதவியாளர்கள் சகலருக்கும் நிரந்தர நியமனம்

## ஒக்டோபர் மாத இறுதிக்குள் வழங்க அரசாங்கம் தீர்மானம்

பயிற்சியாளர்களாக சேர்த்துக்கொள்ளப்படும் அனைத்து பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கும் ஒக்டோபர் மாத இறுதிக்குள் நிரந்தர நியமனம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2020ஆம் ஆண்டில் 34,700 பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களை பயிலுநர்களாக அரசாங்கம் இணைத்துக்கொண்டது. அவர்களில் 29,000 பேர் தற்போது உள்ளதுடன், அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு அரச நிறுவனங்களில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

கேகாலை மாவட்டத்தில் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் 267 பேருக்கு முதற்கட்டமாக நிரந்தர



### கேகாலை மாவட்டத்தில் முதற்கட்டமாக 267 பேருக்கு நிரந்தர நியமனத்தை இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர வழங்கி வைத்தார்

நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கேகாலை மாநகர சபை கேட்போர் கூடத்தில் இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன. 06

வாகனங்கள் தவிர்ந்த ஏனைய சகல

## இறக்குமதி தடைகள் அடுத்த மாதத்தினுள் நீக்கம்



### பதில் நிதி அமைச்சர் சேமசிங்க தெரிவிப்பு

வாகனங்கள் தவிர்ந்த ஏனைய இறக்குமதித் தடைகள் அடுத்த மாதத்தினுள் நீக்கப்படுமென, பதில் நிதி அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே, அவர் இதனைத் தெரிவித்தார். எதிர்பார்த்தளவு பொருளாதார வளர்ச்சி மற்றும் வெளிநாட்டுக் கையிருப்பு அதிகரித்த பின்னர், 06

சிறந்த பல்கலைக்கழகங்கள் தரவரிசையில்

## கொழும்பு மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்கள் தெரிவு




இலங்கையின் சிறந்த பல்கலைக்கழகங்களாக கொழும்பு மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 'Times Higher Education World University' 2024 எனும் தரவரிசையின் அடிப்படையில் இந்த பல்கலைக்கழகங்களும் இலங்கையின் சிறந்த பல்கலைக்கழகங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

எனினும், இந்த இரண்டு பல்கலைக்கழகங்களும் மேற்படி தரவரிசையில் முதல் 1,000 இடங்களுக்குள் இடம் பிடிக்கவில்லை. 06

## தெவட்டகஹ பள்ளிவாசலில் மீலாத் விழா



ரபிஉல் அவ்வல் மாதத்தை முன்னிட்டு மீலாத் விழா, தெவட்டகஹ தர்ஹா மற்றும் ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (28) மிகச் சிறப்பாக நடைபெற்றது. மேற்படி பள்ளிவாசல் தலைவர் றியாஸ் ஷாலி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், நபியவர்களுக்காக குர்ஆன் புகழ்மாலை ஓதப்பட்டதுடன், மௌலீது வைபவமும் நடைபெற்றது. இதன்போது நபியவர்களின் வாழ்க்கை வரலாறு, அவர்கள் முழு மனித சமுதாயத்துக்கும் காட்டித்தந்த நற்பண்புகள், அவர்களின் தியாகம் தொடர்பாக விசேட மீலாத் உரையை ஹாபிஸ் மௌலவி ஈஸான் காதிரி வழங்கினார். இதனைத் தொடர்ந்து விசேட துஆ பிரார்த்தனையும் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள், கலாநிதி ஹஸன் மௌலானா, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி, உலமாக்கள், ஊடகவியலாளர்கள் ஆகிய பலரும் கலந்துகொண்டனர்.



### பாக். மீலாதுன் நபி பேரணியில் குண்டு தாக்குதல்; 52 பேர் பலி

02

## அபிவிருத்தியை நோக்கி செல்ல இலங்கைக்கு சீனா ஆதரவு

### சீனத் தூதுவர் கியு ஷென்ஹாங் தெரிவிப்பு



வறுமையிலிருந்து நாட்டை மீட்டெடுத்து அபிவிருத்தியை நோக்கிச் செல்வதற்கு இலங்கைக்கு தொடர்ச்சியான ஆதரவை சீனா வழங்குவதாக, இலங்கைக்கான சீனத் தூதுவர் கியு ஷென்ஹாங் தெரிவித்தார்.

சீனாவின் அதிவேக அபிவிருத்திப் பயணத்துக்கு இலங்கை உட்பட அனைத்து நாடுகளும் வரவேற்கப்படுவதாகவும், சீனத் தூதுவர் தெரிவித்தார்.

சீன மக்கள் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டு 74ஆவது ஆண்டு நிறைவையிட்டு கொழும்பில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்ட போதே, சீனத் தூதுவர் இவ்வாறு தெரிவித் தார். 06

## மாகாண சபைகளிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்கள்

### மீளப் பெறுவது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சு –CV



மாகாண சபைகளிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் மாகாணங்களுக்கு வழங்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடி வருவதாக, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் (28) நடைபெற்ற கலந்துரையாடலின் 06

## மின் கட்டண அதிகரிப்புக்கு அனுமதி கோரும் இ.மி.ச.

### பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் வேண்டுகோள்

Leco 2.5 வீத சமூக பாதுகாப்பு வரியை அறவிடவும் நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**




மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான அனுமதியை பெற்றுத்தருமாறு பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் இலங்கை மின்சார சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. இதற்கமைய, கடந்த ஜனவரியில் மேற்கொள்ளவிருந்த மின்சார கட்டண திருத்தத்தை ஒக்டோபரில் மேற்கொள்ளும் வகையில் அனுமதி வழங்க 06

## நாட்டில் மழையுடனான காலநிலை தொடரும் சாத்தியம்

### வானிலை அவதான நிலையம் தெரிவிப்பு



நாட்டின் தென்மேற்கு பிராந்தியத்தில் நிலவுகின்ற மழையுடனான வானிலை மேலும் தொடரலாமென்று எதிர்பார்க்கப்படுவதாக, சிரேஷ்ட வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹீன் தெரிவித்தார்.

சப்ரகமுவ, மேல், தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களிலும் காலி, மாத்தறை மற்றும் புத்தளம் 06

உலக சிறுவர் தினம் நாளை ஒக். 01

## தெஹிவளை Zoo இல் சிறாருக்கு இலவச அனுமதி




உலக சிறுவர் தினமான ஒக்டோபர் முதலாம் திகதியன்று தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலை மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களை பார்வையிடுவதற்காக 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு இலவச அனுமதி அம்மிருகக்காட்சி சாலையினால் வழங்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் சிறுவர்களுக்காக பல விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள தேசிய மிருகக் காட்சித் திணைக்களம், காலை 8.30 மணி 06

## தனுஷ்க குணதிலக மீண்டும் நவ. 04 இல் நாடு திரும்புகிறார்

### தொடர்ந்து கிரிக்கெட் விளையாடவும் விருப்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டு தொடர்பாக கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்ட இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக எதிர்வரும் நவம்பர் முதல் வாரத்தில் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக, விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்தது. 20க்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்காக கடந்த ஆண்டு 06

கடற்படையின் அதிரடி சுற்றிவளைப்புகளில்

## புத்தளத்தில் ஒரே வாரத்தில் 4,098 Kg பீடி இலைகள் மீட்பு


**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**



புத்தளத்தின் கற்பிட்டி வன்னிமுந்தல், இலந்தையடி மற்றும் தளுவ பிரதேசங்களில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, 4,098 கிலோ 500 கிராம் பீடி இலைகளுடன், 4 சந்தேகநபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். 06

அதிவேகமாக சென்ற

## கார் தலைகீழாக தடம்புரண்டு விபத்து



ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் அதிவேகமாக பயணித்த காரொன்று நேற்று (29) அதிகாலை 1.00 மணியளவில் ஹற்றன், கொட்டகலை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

அதிவேகமாக பயணித்த இந்தக் கார், கடும் மழை காரணமாக வீதியில் சறுக்கிச் சென்று அருகிலுள்ள மண்மேடொன்றுடன் மோதி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக, 06

# சர்வதேச செய்திகள்

## மத்தியதரைக் கடலை கடக்கும் முயற்சியில் 2023இல் இதுவரையில் 2,500 அகதிகள் பலி

மத்தியதரைக் கடலைக் கடந்து ஐரோப்பாவுக்குச் செல்லும் முயற்சியில் இந்த ஆண்டில் இதுவரை 2,500க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து அல்லது காணாமல்போயிருப்பதாக ஐ.நா அகதிகள் நிறுவனம் தெரிவித்துள்ளது. இதே காலப்பகுதியில் சுமார் 186,000 பேர் ஐரோப்பிய நாடுகளை அடைந்துள்ளனர்.

அகதிகளுக்கான ஐ.நாவின் உயர்ஸ்தானிகரகத்தின் பணிப்பாளர் ருவேன் மெனிக்திவேலா ஐ.நா பாதுகாப்புச் சபையில் நேற்று முன்தினம் பேசியபோது, 186,000 மக்கள் மத்தியதரைக் கடலை கடந்திருப்பதோடு இதில் 83 வீதமான சுமார் 130,000 பேர் இத்தாலியை அடைந்துள்ளனர் என்றார்.



மத்தியதரைக் கடலைக் கடந்து மக்கள் சென்றடைந்த மற்ற நாடுகளில் கிரேக்கம், ஸ்பெயின், சைப்ரஸ் மற்றும் மோல்டா நாடுகளும் அடங்குவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த அபாயகரமான கடல் பயணத்தை கடக்கும் முயற்சியில் உயிரிழந்தவர்கள் அல்லது காணாமல் போனவர்கள் எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் அதிகரித்திருப்பதாக பாதுகாப்புச் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"செப்டெம்பர் 24 இற்குள் 2023 இல் மாத்திரம் 2,500க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து அல்லது காணாமல்போயுள்ளனர்" என்று மெனிக்திவேலா தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கை 2022இல் இந்தக் காலப்பகுதியில் பதிவான 1,680 உயிரிழப்பு அல்லது காணாமல்போனவர்களுடன் ஒப்பிடுகையில் பெரும் அதிகரிப்பாகும்.

இந்த உயிரிழப்புகளில் முடிவை காணவில்லை என்றும் ஐரோப்பாவுக்காக தரைவழிப் பாதையும் இதைப்போன்றே ஆபத்து மிக்கது என்றும் மெனிக்திவேலா கூறினார்.

இதில் துணை சஹாரா ஆபிரிக்க நாடுகளில் இருந்து தரை வழியாகப் பயணித்து கடலை கடப்பதற்கான புறப்படும் நாடுகளான துனீஷிய மற்றும் லிபிய கடற்கரை வரையான பயணப் புள்ளிகள் தொடர்பிலும் பாதுகாப்பு சபையிடம் விபரிக்கப்பட்டது.

"மக்கள் அவதானத்தை பெறாத நிலையில் நிலங்களில் உயிரிழப்புகள் இடம்பெற்று வருகின்றன" என்று மெனிக்திவேலா குறிப்பிட்டார்.

துனீஷியாவில் இருந்து மத்தியதரைக் கடலை கடக்கும் முயற்சியில் 102,0000க்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர். இது கடந்த ஆண்டை விடவும் 260 வீதம் அதிகரிப்பாக இருப்பதோடு லிபியாவில் இருந்து 45,000க்கும் அதிகமானவர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## பாக். மீலாதுன் நபி பேரணியில் குண்டு தாக்குதல்: 52 பேர் பலி

தெற்கு பாகிஸ்தானில் இறைத்தூதர் முஹமது நபியின் பிறந்த தினமான மீலாதுன் நபி கொண்டாட்டத்தை ஒட்டி இடம்பெற்ற பேரணி மீது நடத்தப்பட்ட குண்டு தாக்குதலில் குறைந்தது 52 பேர் கொல்லப்பட்டு 50க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள மதங் மாவட்டத்தில் நேற்று (29) இடம்பெற்ற இந்த குண்டு வெடிப்பில் பொலிஸ் அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார். இது தற்கொலை தாக்குதல் போன்று இருப்பதாக மூத்த பொலிஸ் அதிகாரியான ஜாவித் லஹ்ரி தெரிவித்துள்ளார். பிரதி பொலிஸ்மா அதிபர் நவாஸ் கிஷ்கோரியின் வாகனத்திற்கு அருகிலேயே தற்கொலைதாரி குண்டை வெடிக்கச் செய்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



பள்ளிவாசலுக்கு அருகிலேயே குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. காயமடைந்தவர்கள் அருகில் இருக்கும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருப்பதோடு சிலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இந்தத் தாக்குலுக்கு எவரும் பொறுப்பேற்காதபோதும், பயங்கரவாத பின்னணிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருப்பதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சு உறுதி செய்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் இறைத்தூதரின் பிறந்த நாளை ஒட்டி பொது நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர். இந்த நிகழ்வுகளை ஒரு சில முஸ்லிம் தரப்புகள் தேவையற்றதாக கருதுகின்றமை என்பது குறிப்பிடத்தக்கது.

## மேகங்களில் நுண்ணிய பிளாஸ்டிக் கண்டுபிடிப்பு

மேகங்களில் நுண்ணிய பிளாஸ்டிக் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ஜப்பானின் புஜி, ஓயாமா சிகரங்களை மறைக்கும் பனியிலிருந்து நீர் சேகரிக்கப்பட்டது.

ஒவ்வொரு லிற்றர் தண்ணீரிலும் 6 முதல் 14 துகள்கள் வரை இருந்ததாக என்வார்மென்டல் கெமஸ்ட்ரி லெட்டர்ஸ் சஞ்சிகையில் கூறப்பட்டது.

மேகங்களில் உள்ள பிளாஸ்டிக் பருவநிலையை எப்படிப் பாதிக்கிறது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

சூரிய ஒளியிலிருந்து வெளியாகும் புற ஊதா கதிர்கள் படும்போது நுண்ணிய பிளாஸ்டிக் சிதைந்து போவதுண்டு. அப்போது வெப்ப வாயு வெளியேற்றப்படுவதாகக் கூறப்படுகிறது.

பிளாஸ்டிக்கால் ஏற்படும் காற்றுத் தூய்மைக்கேட்டைக் கையாள்வது அவசியம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். 5 மில்லிமீற்றருக்கு குறைவான பிளாஸ்டிக் துகள்களே நுண்ணிய பிளாஸ்டிக் என அழைக்கப்படுகிறது.



இது புடவை, வாகன டயர்கள், தனிப்பட்ட கார் உற்பத்திகள் மற்றும் ஏனைய மூலங்களில் இருந்து வெளியாகிறது. இந்த பிளாஸ்டிக் துகள்கள் மீனின் உடம்பில், ஆர்டிக் கடல் பணிக்கட்டி மற்றும் பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினுக்கு இடையில் இருக்கும் பைரனீஸ் மலைகளிலும் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நுண்ணிய பிளாஸ்டிக் சுற்றுச்சூழல் பாதிப்புக்கப்பால் இதயம் மற்றும் நுரையீரல் ஆரோக்கியம் மற்றும் புற்றுநோய்கள் என பல்வேறு சுகாதார பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக உள்ளது.

## சொந்த நீர்மூழ்கிக் கப்பலை அறிமுகம் செய்தது தாய்வான்

தாய்வான் உள்ளூரில் கட்டப்பட்ட அதன் முதல் நீர்மூழ்கிக் கப்பலை அறிமுகம் செய்துள்ளது. சீனாவுக்கு எதிரான தற்காப்பை வலுப்படுத்துவது அதன் நோக்கமாகும்.

நீர்மூழ்கிக் கப்பலின் வெள்ளோட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி சாய் இங்–வென் இது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம் எனக் கூறினார். உள்ளூரில் நீர்மூழ்கிக் கப்பலை உருவாக்குவது இதற்கு முன்னர் சிந்தித்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று என அவர் தெரிவித்தார்.

நீர்மூழ்கிக் கப்பல் மீது சில சோதனைகள் செய்ய வேண்டும் என அதிகாரிகள் கூறினர். அதன்பின் அடுத்த ஆண்டு இறுதிக்குள், அது, கடற்படையிடம் ஒப்படைக்கப்படும்.

தாய்வான் தற்காப்புக்காக இதுவரை இல்லாத அளவாக அடுத்தாண்டில் 19



பில்லியன் டொலரை ஒதுக்குகிறது. முக்கியமாக அமெரிக்காவிடமிருந்து இராணுவச் சாதனங்களைப் பெற அந்த நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப்படும் எனக் கூறப்பட்டது. தாய்வானின் கடற்படை தற்போது இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்துகிறது.

சீனாவிடம் சுமார் 60 நீர்மூழ்கிக் கப்பல்கள் இருக்கின்றன. அவற்றுள் ஆறில் அணுவாயுத ஆற்றலும் புவியீர்ப்பு ஏவுகணைகளும் இருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.

## ஹர்ரி பொட்டர் நடிகர் காலமானார்

பிரபல ஆங்கிலத் திரைப்படத் தொடரான ஹர்ரி பொட்டரில் 'டம்பிள்டோர்' கதாபாத்திரத்தை ஏற்று நடித்த மைக்கல் கேம்பன் தனது 82 ஆவது வயதில் காலமானார். நுரையீரல் பிரச்சினையால் அவதியுற்ற அவர் கடந்த புதன்கிழமை (27) காலமானார். "சர் மைக்கல் கேம்பனின் இழப்பு பெரும் வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது," என்று அவரது குடும்பம் தெரிவித்தது. ஹர்ரி பொட்டர் திரைப்படங்களில் மைக்கலுடன் வேலை செய்தது தமக்குப் பேரின்பத்தைக் கொடுத்ததாக இயக்குநர் ஜே. கே. ரௌலிங் முன்னர் ட்விட்டர் என்று அறிப்பட்டர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார். 1940ஆம் ஆண்டில் அயர்லந்தின் டப்ளின் நகரில் பிறந்த மைக்கல் கேம்பன் லண்டனில் வளர்ந்தார். கேம்பன் எட்டு பாகங்கள் கொண்ட ஹர்ரி பொட்டர் திரைப்படத்தில் முதல் ஆறு பாகங்களில் நடித்திருந்தார். அவர் தி ஓமன், தி லாஸ்ட் செப்டெம்பர், சேர்ச்சில்ஸ் சீக்ரெட் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## அஸர்பைஜான் நாட்டின் பிடியில் வந்த 'நகோர்னா–கராபக் குடியரசு' கலைப்பு

அஸர்பைஜானுக்கும், ஆர்மேனியாவுக்கும் இடையே தனி நாடாக இயங்கி வந்த நகோர்னா–கராபக் குடியரசு கலைக்கப்படுவதாக பிராந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்தப் பிராந்தியத்தை அஸர்பைஜான் படைகள் அண்மையில் கைப்பற்றியதைத் தொடர்ந்து சர்வதேச நாடுகளால் அங்கீகரிக்கப்படாத அந்தக் குடியரசு கலைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நகோர்னா–கராபக்' குடியரசைக் கலைக்கும் அரசாணையில் ஜனாதிபதி சாம்வெல் ஷாராமான்யன் கையொப்பமிட்டுள்ளார். வரும் ஜனவரி மாதம் 1ஆம் திகதியில் குடியரசு கலைக்கப்பட வேண்டும் என்று அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தத் திகதிக்குப் பின்னர் நகோர்னா–கராபக்' குடியரசு என்ற ஆட்சியமைப்பே இருக்காது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையே, அசர்பைஜான் அரசால் துன்புறுத்தப்படலாம் என்ற அச்சத்தின் பேரில், அந்தப் பிராந்தியத்திலிருந்து இதுவரை 50 வீதத்திற்கும் மேற்பட்ட ஆர்மேனிய பழங்குடியினர் வெளியேறி ஆர்மேனியாவில் தஞ்சமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சோவியட் ஒன்றியத்தின் முன்னாள் உறுப்பு நாடுகளான ஆர்மேனியாவுக்கும், அசர்பைஜானுக்கும் இடையில் அமைந்துள்ள நகோர்னா–கராபக்'' பிராந்தியம் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் நீடித்து வருகிறது.




ஆர்மேனியப் பழங்குடியினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட அந்தப் பிராந்தியத்தை அசர்பைஜானின் ஓர் அங்கமாக சர்வதேச நாடுகள் அங்கீகரித்தன. இருந்தாலும், கடந்த 1994ஆம் ஆண்டு போருக்குப் பின் ஆர்மேனியப் படையினரின் ஆதரவுடன் அந்தப் பகுதியை பிரிவினைவாதிகள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அதன் பின் அந்தப் பிராந்தியத்தில் ஆர்மேனியாவும், அஸர்பைஜானும் அவ்வப்போது மோதலில் ஈடுபட்டு வந்தன.

இந்தச் சூழலில், இரு நாட்டுப் படையினருக்கும் இடையே கடந்த 2020இல் நடைபெற்ற 6 வாரப் போரில் 6,600க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

இந்தப் போரில் ஆர்மேனியாவையும், நகோர்னா–கராபக்'' பிராந்தியத்தையும் இணைக்கும் ஒரே தரைவழித் தடமான லச்சின் வீதியை அஸர்பைஜான் முற்றுகையிட்டது. அந்த வீதி அஸர்பைஜான் படையினர் பல மாதங்களாக முற்றுகையிட்டது ஆர்மேனியாவுக்கும் அந்த நாட்டுக்கும் இடையிலான பதற்றத்தை மீண்டும் அதிகரித்தது. இந்த முற்றுகையால் நகோர்னா–கராபக் பிராந்தியத்துக்குத் தேவையான எரிபொருள் அத்தியாவசிப் பொருட்களைக் கொண்டு சேர்க்க முடியாமல் இருந்தது.

இந்த நிலையில், நகோர்னா–கராபக் பிராந்தியத்தில் 'பயங்கரவாதத் தடுப்பு' நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறி அந்தப் பகுதியில் அஸர்பைஜான் கடந்த செப்டெம்பர் 19ஆம் திகதி அதிரடி தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டது. அதனை சமாளிக்க முடியாத ஆர்மேனிய பிரிவினைவாதப் படையினர் போர் நிறுத்தம் மேற்கொண்டு, தங்கள் ஆயுதங்களை அஸர்பைஜான் படையினரிடம் ஒப்படைக்க ஒப்புக் கொண்டனர்.

அதையடுத்து, நகோர்னா–கராபக்' பிராந்தியம் மீண்டும் தங்களது கட்டுப்பாட்டுக்கு வந்துவிட்டதாக அஸர்பைஜான் அறிவித்தது. இந்தச் சூழலில், கடந்த சுமார் 30 ஆண்டுகளாக அந்தப் பிராந்தியத்தின் ஆட்சியமைப்பாக இருந்து வந்த நகோர்னா–கராபக்'' குடியரசை வரும் ஜனவரி 1ஆம் திகதி கலைக்க அதன் ஜனாதிபதி சாம்வெல் ஷாராமான்யன் தற்போது அரசாணை பிறப்பித்துள்ளார்.

## ஸ்பெயின் குகையில் ஐரோப்பாவின் பழமையான செருப்பு கண்டுபிடிப்பு

சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன்னர் புல்லினால் வெய்யப்பட்ட ஐரோப்பாவின் மிகப் பழமையான செருப்பு மற்றும் மண் வெட்டியை கண்டுபிடித்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஸ்பெயினில் 19 ஆம் நூற்றாண்டில் சுரங்கத் தொழிலாளர்களால் சூறையாடப்பட்ட வெளவால் குகை ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வின்போதே இந்த பண்டைய பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறைந்த வெப்பம் மற்றும் குளிரான காற்று அந்த குகையில் உள்ளவற்றை பாதுகாக்க உதவியுள்ளது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கூடைகள் மற்றும் கருவிகளின் தொகுதி ஒன்றையும் ஆய்வாளர்கள் பகுப்பாய்வு செய்து வருகின்றனர். இதுவரை அறியப்பட்டதில் தெற்கு ஐரோப்பாவின் தாவர நார் பொருட்களின் சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்ட மிகப் பழமையான பொருட்கள் இவை என்று இந்த ஆய்வின் இணை ஆசிரியரான மரியா ஹரேரோ ஒடால் தெரிவித்துள்ளார்.

இந்த பொருட்களை தயாரித்த தொழில்நுட்பம் மற்றும் மூலப்பொருட்களை கையாண்ட விதம் ஆகியவற்றை கொண்டு வரலாற்றுக்கு முன்னர் வாழ்ந்த சமூகங்கள் அதிக திறன் கொண்டவர்களாக இருந்தது உறுதியாகிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



இதில் குகையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட 76 பொருட்கள் முன்னர் நம்பப்பட்டதை விடவும் 2,000 ஆண்டுகள் பழமையானவை என்பது புதிய காலக் கணிப்பு தொழில்நுட்பத்தில் உறுதியாகியுள்ளது. சில பொருட்கள் 9,000 ஆண்டுகள் பழமையானவையாகும்.

இதில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் செருப்பு பல்வேறுபட்ட புல் வகைகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருப்பதோடு இதில் தோல் மற்றும் சுண்ணாம்பு உள்ளடக்கப்பட்டிருப்பதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

இது புதிய கற்காலத்தைச் சேர்ந்தது என்பதோடு 2008 ஆம் ஆண்டு ஆர்மேனிய குகை ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்ட 5,500 ஆண்டுகள் பழமையான தோல் பாதணிகளை விடவும் பழமையானதாகும்.

தென் மேற்கு ஸ்பெயினின் அன்டலுளசாவில் உள்ள வெளவால்களின் குகை அல்லது குவாடி லொஸ் முர்சிலாகொஸ் குகையில் இருந்தே இந்த 6000 ஆண்டு பழமையாக செருப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட குகை 1831 ஆம் ஆண்டு முதல்முறை நிலப்பிரபு ஒருவர் உர உற்பத்திக்காக வெளவால் எச்சத்தை பெற பயன்படுத்தப்பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பின்னர் இரண்டு தசாப்தத்திற்கு குறைவான காலத்தில் சுரங்கத் தொழிலாளர்கள் இந்த குகையை பயன்படுத்தி உள்ளனர். அப்போது பதப்படுத்தப்பட்ட உடல்கள், கூடைகள், மரக் கருவிகள் மற்றும் பலதும் கண்டுபிடிக்கப்பட்டன.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 செப்டெம்பர் 30 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.44
லுஹர் - 12.03
அஸர் - 03.16
மஃரிப் - 06.05
இஷா - 07.14

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் புரட்டாதி 14
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# சர்வதேச பிரதிநிதிகளின் கவனத்தை ஈர்த்த அமைச்சர் பந்துலவின் பீஜிங் மாநாட்டு உரை

**லோரன்ஸ் செல்வநாயகம்**




2023 பூகோள நிலைபேறான போக்குவரத்து பேரவையில் போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன முன்வைத்துள்ள விடயங்கள் தொடர்பாக சர்வதேச பிரதிநிதிகள் விசேட கவனம் செலுத்தியுள்ளனர்.

2023 பூகோள நிலைபேறான போக்குவரத்து பேரவை மாநாட்டு அமர்வுகள் சீனாவின் பீஜிங் நகரில் வெற்றிகரமாக நிறைவடைந்ததுடன், இதில் ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு சர்வதேச நாடுகளின் போக்குவரத்து அமைச்சர்கள் உள்ளிட்ட விசேட அதிதிகள் 60 பேருக்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

'நிலைபேறான போக்குவரத்து பூகோள அபிவிருத்தி ஊக்குவிப்புக்காக ஒன்றிணைந்து செயற்படுதல்' எனும் தொனிப்பொருளில் இம்முறை மாநாடு நடைபெற்றது.

ஆரம்ப வைபவம், பொதுச்சபை, சீனாவின் முன்னணி நிர்மாணத்துறை நிறுவனங்களின் பிரதிநிதிகள் சந்திப்பு, கண்காட்சி மற்றும் போக்குவரத்து அமைச்சர்களின் வட்டமேசை மாநாடு ஆகிய பல்வேறு அமர்வுகளை மாநாடு கொண்டிருந்தது. அத்துடன், 15ஆவது சீன சர்வதேச போக்குவரத்து, தொழில்நுட்பம் மற்றும் உதிரிப்பாகங்கள் கண்காட்சியும் இம்மாநாட்டின் போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை சார்பாக இம்மாநாட்டில் அமைச்சர் பந்துல குணவர்தன கலந்து கொண்டதுடன், பல்வேறு அம்சங்களை கொண்டிருந்த மாநாட்டின் பிரதான உரையை அமைச்சர் பந்துல குணவர்தன ஆற்றினார். பல விடயங்களை உள்ளடக்கிய அமைச்சரின் உரையானது, சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள், அந்நாடுகளின் போக்குவரத்து அமைச்சர்கள், விசேட அதிதிகளின் கவனத்தை ஈர்த்தமை குறிப்பிடத்தக்கது.

போக்குவரத்து துறையின் சிறந்த அம்சங்களை சீரமைப்பதன் மூலம் பிராந்திய அபிவிருத்திக்கான தொடர்புகள், ஒத்துழைப்பு மற்றும் இணைந்த செயற்பாடு, யூ.என்.டி.பி., யூ.என்.ஈ.பி., யுனெஸ்கோ போன்ற சர்வதேச அமைப்புகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் சர்வதேச தொடர்புகளை கட்டியெழுப்புதல், போக்குவரத்து துறையின் அனைத்து சேவைகளையும் டிஜிட்டல் மயப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் அமைச்சரின் உரையில் உள்ளடங்கியமை குறிப்பிடத்தக்கது.

## சீன மக்கள் குடியரசின் 74ஆவது ஆண்டு விழாவில்...



சீன மக்கள் குடியரசின் 74ஆவது ஆண்டு நிறைவையிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு கொழும்பில் (28) நடைபெற்றது. நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, டக்ளஸ் தேவானந்தா, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# வெளிநாட்டில் வேலை பெற்றுத்தருவதாக பண மோசடி

கண்டி, கடுகண்ணாவை பிரதேசத்தில் வாடகைக்கு தங்கியிருந்து வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி 137,000 ரூபா பண மோசடி செய்த நபரொருவர் கடுகண்ணாவையில் நுவரெலியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைதான நபர் காலி, மீரன்தெனிய பிரதேசத்தில் வசிக்கும் 55 வயதுடையவரென தெரிய வந்துள்ளது.

சந்தேக நபருக்கு எதிராக மத்துகம, மஹர, பன்னல, கோட்டை, கேகாலை, தம்புள்ளை, நுவரெலியா, காலி, பலப்பிட்டிய, அநுராதபுரம், நுகேகொடை, களுத்துறை மற்றும் புதுக்கடை நீதிமன்றங்களில் 13 பண மோசடி வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

சீரற்ற காலநிலை, நீண்ட விடுமுறை

# மிக அவதானமாக செயற்படுமாறு சாரதிகள், மக்களுக்கு அறிவுறுத்து

## பொலிஸ் தலைமையகம் விசேட அறிவித்தல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**




கடும் மழையுடனான சீரற்ற காலநிலை மற்றும் நீண்டவார இறுதி விடுமுறை தினங்களை கவனத்திற்கொண்டு பொதுமக்களுக்கு விசேட அறிவுறுத்தலொன்றை பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ளது.

இந்நிலையில், நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணிப்பவர்கள் தமது பாதுகாப்பில் அவதானமாக செயற்பட வேண்டுமென்று பொதுமக்களை பொலிஸ் தலைமையகம் கேட்டுக்கொண்டுள்ளது.

வாகனங்களை செலுத்தும் போது உரிய போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்ற வேண்டுமெனவும் கண்டி, நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களிலும் ஹட்டன் நகரிலும் அதிக பனிமூட்டம் நிலவுவதால், வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் நடக்க வேண்டுமெனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். இதேவேளை, மலையகப் பகுதி வீதிகளில் மண்சரிவு அபாயம் காணப்படுவதால், சாரதிகள் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

வாகனங்களை அதிகரித்த வேகமாக செலுத்துதல், போக்குவரத்து விதிமுறைகளை மீறுதல், மதுபோதையில் வாகனங்களை செலுத்துதல் உள்ளிட்ட குற்றச் செயல்கள் தொடர்பாக அறிவுறுத்தியுள்ள பொலிஸ் தலைமையகம், இவற்றை கண்காணிக்கும் வகையிலும் பொதுமக்களின் நன்மை கருதியும் நாடளாவிய ரீதியில் போக்குவரத்து பிரிவு பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்தியுள்ளதாகவும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ மேலும் தெரிவித்தார்.

'பலமுனை உலகில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல்'

# அரச தலைவர்களின் கலந்துரையாடலில் ஜேர்மன் அதிபருடன் ஜனாதிபதி பங்கேற்பு



ஜேர்மன் அதிபர் ஓலாஃப் ஷோல்ஸ் தலைமையில் நேற்று முன்தினம் (28) நடைபெற்ற 'பேர்லின் குளோபல்' மாநாட்டுக்கு இணைந்த வகையில் நடைபெற்ற 'பலமுனை உலகில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல்' தொடர்பான அரச தலைவர் கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்ட போது பிடிக்கப்பட்ட படம்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## மீலாதுன் நபி நிகழ்வில் பிரதமர் பங்கேற்பு



**தெஹிவளை கல்கிஸை விசேட நிருபர்**

கொள்ளுப்பிட்டி ஜும்ஆ பள்ளிவாசலில் மீலாதுன் நபி வைபவம் அப்பள்ளிவாசலின் இணைத் தலைவர் முஸ்லிம் சலாஹூடீன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது இதில் பிரதம அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்தன கலந்து கொண்டார். இதன் போது, கொள்ளுப்பிட்டியில் வாழும் மூவினங்களையும் சேர்ந்த வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள 3000 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், பாடசாலை மாணவர்களுக்கு பிரதமர் பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

கடும் மழையால் வெள்ளப்பெருக்கு அபாயம்

# ரயில், பஸ் போக்குவரத்துக்கான வீதிகள், வீடுகள் பாதிப்பு

## நீர்ப்பாசன திணைக்களம் தெரிவிப்பு




**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் பெய்துவரும் கடும் மழை காரணமாக நில்வள கங்கை, களுகங்கை, கிங் கங்கை உள்ளிட்ட கங்கைகள் மற்றும் ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்து, வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்பட்டுள்ளதாக, நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்தது.

இந்நிலையில், நில்வள கங்கை மற்றும் களுகங்கையை அண்டிய பிரதேசங்களுக்கு நீர்ப்பாசன திணைக்களம் விடுத்த வெள்ளப்பெருக்கு அபாய எச்சரிக்கையை மேலும் 24 மணிநேரத்துக்கு நீடித்துள்ளது. ஆகையால் ஆறுகள் மற்றும் கங்கைகளை அண்டிய இடங்களில் வாழும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டுமெனவும், நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

வெள்ளப்பெருக்கு காரணமாக ரயில் மற்றும் பஸ் போக்குவரத்துகளுக்கும் பல தடைகள் ஏற்பட்டுள்ளதுடன், சில இடங்களில் சிறு மண்சரிவுகள், மரங்கள் முறிந்து விழுதல் போன்ற அனர்த்தங்களும் நேற்று இடம்பெற்றன.

அத்துடன், இரத்தினபுரி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் பெய்து வரும் கடும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் பல பிரதான வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வீடுகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் அவ்விடங்களில் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், சில வீதிகளுக்கு பதிலாக மாற்று வீதிகளை பொலிஸார் அறிமுகப்படுத்தியுள்ளனர். இரத்தினபுரியின் எலபாத்த, கரங்கொட, திமியாவ தம்புலுவன, கஹவத்தை ஆகிய இடங்களிலேயே பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளன. அத்துடன், ஹம்பாந்தோட்டை மாவட்டம் உட்பட பல மாவட்டங்களிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு போக்குவரத்து வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், நீர்ப்பாசன திணைக்களம் மேலும் தெரிவித்தது.

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் காத்தான்குடி பௌஸ்



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (03) இரவு 8.15 மணி நிகழ்ச்சியில் மௌலவி, கவிஞர், கலாபூஷணம் பௌஸ் அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.

முஸ்லிம் சேவையின் பணிப்பாளராக மௌலவி அல்ஹாஜ் இஸட். எல்.எம்.முஹம்மத் இருந்த காலத்தில் முஸ்லிம் சேவையில் சன்மார்க்க நிகழ்ச்சிகளை அவர் வழங்கியதுடன், கலந்துரையாடல், கவியரங்கு ஆகியவற்றிலும் பங்கேற்றிருந்தார்.

காத்தான்குடியை பிறப்பிடமாக கொண்ட அவர், பலபிட்டிய ஜும்மா பள்ளிவாசலில் 10 வருடங்களும் பாணந்துறை அல்முபாரக் ஜும்ஆ மஸ்ஜிதில் 31 வருடங்களும் பணியாற்றி பேரபிமானத்தை பெற்றார்.

அத்துடன் சன்மார்க்கம், தமிழ் இலக்கியம் சார்ந்த நூல்கள் பலவற்றையும் அவர் எழுதியுள்ளார்.

இந்நிகழ்ச்சியை எம்.எஸ்.எம்.ஜின்னா தொகுத்தளிப்பதுடன், முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்து வழங்குகிறார்.

# தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆண்டு நிறைவு நிகழ்வு

NUJA SRI LANKA
தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியம்
NATIONAL UNITY JOURNALIST ASSOCIATION

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் 19ஆவது ஆண்டு நிறைவும் வருடாந்த ஒன்றுகூடலும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று (30) இரவு 7.00 மணிக்கு அட்டாளைச்சேனை யாடோ ஹோட்டலில் நடைபெறவுள்ளது. தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர், சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கரையோர பிரதேசங்களுக்கான அபிவிருத்தி குழுத் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பல விடயங்கள், ஒன்றியத்தின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது. இதன் பின்னர் புதிய நிர்வாகத் தெரிவும் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் நினைவாக கணினிகள் அன்பளிப்பு

**பாலமுனை தினகரன் நிருபர்**



முன்னாள் பிரதியமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் நினைவாக ஒரு தொகை கணினிகள் மாணவர்களுக்கு றிஸ்லி முஸ்தபா கல்வி சமூக சேவை அமைப்பினால் வழங்கி வைக்கப்பட்டன.

கல்முனை ஜாமியா மன்பயில் ஹிதாயா அரபுக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களின் நன்மை கருதி கணினிகளை மேற்படி ஸ்தாபகர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்துகொண்டு வழங்கி வைத்தார்

கடந்த சுனாமி அனர்த்தத்தின் போது பெரிதும் பாதிக்கப்பட்ட இந்த அரபுக் கல்லூரிக்கு றிஸ்லி முஸ்தபா தனது சொந்த நிதி உததவி மூலம் கணினிகளை அன்பளிப்பு செய்துள்ளார்.

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 14ஆம் நாள் சனிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் அவ்வல் பிறை 14

### குறள் தரும் சிந்தனை



அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறம்கூறான் என்றல் இனிது

ஒருவன் பாவங்களைச் செய்யினும்
புறங்கூறாதிருத்தல் நன்று.

# மனித உயிர்களுக்கு உரிய மதிப்பளிப்பது அவசியம்!

வாகனங்களின் பெருக்கம் அதிகரித்து விட்டதனால், வீதிகளில் இன்று பயணம் செய்வதே சிரமமாக இருக்கின்றது. நகரப்பகுதிகளில்தான் வாகன நெருக்கடி மிகவும் அதிகம். வீதிகளை வாகனங்கள் முற்றாக ஆக்கிரமித்துக் கொண்டதனால், பயணங்கள் தாமதமாகின்றன. உரிய இடத்தை திட்டமிட்ட நேரத்தில் சென்றடைய முடிவதில்லை. வீதியில் வாகனங்களுக்குள் நீண்ட நேரம் காத்துக் கிடப்பதே பெரும்பாடாகப் போய்விட்டது.

சனத்தொகை அதிகரித்து வருவதைப் போன்று, மக்களின் தேவைக்கேற்ப வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவுவதாகக் கூறினாலும், வாகனங்களின் பெருக்கத்துக்கு அளவேயில்லை. புதுப்புது வாகனங்கள் வீதிக்கு வந்து கொண்டேயிருக்கின்றன.

எரிபொருளுக்கும் கியூ.ஆர் கோட்டா முறைமை தற்போது நடைமுறையில் இல்லை. வாகனங்களுக்குரிய எரிபொருளை தாராளமாகவே நிரப்பிக் கொள்ள முடிகின்றது. எனவே வீதிகளில் வாகனங்களுக்குக் குறைவில்லை. நகரங்களில் காலையிலும், மாலையிலும் வாகனநெருக்கடியைப் பார்க்கின்ற போது, நடந்து செல்வதே பரவாயில்லை என்று நினைக்கத் தோன்றுகின்றது. அதுமாத்திரமன்றி, பொருளாதார நெருக்கடியென்பது உண்மையிலேயே எமது நாட்டில் உள்ளதா என்ற சந்தேகமும் எழுகின்றது.

வீதிகளில் வாகன நெருக்கடி என்பது ஒருபுறமிருக்க, விபத்துகள் அதிகரித்து வருவது மற்றொரு பாரிய பிரச்சினையாக உள்ளது. நாட்டில் பாரிய விபத்துகள் இடம்பெறாத நாள் கிடையாது. தினந்தோறும் நாட்டில் எங்காவது ஓரிடத்தில் பாரிய விபத்துகள் இடம்பெறுவதும், மக்கள் உயிரிழப்பதும் வழமையாகிப் போயுள்ளன. இலங்கையில் தினந்தோறும் சராசரியாக எட்டு தொடக்கம் பத்துப் பேர் வரை வீதிவிபத்துகளில் உயிரிழப்பதாகவும், மேலும் பலர் படுகாயமடைவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீதிவிபத்துகளில் படுகாயமடைபவர்களில் பலர் நிரந்தரமாகவே மோசமான உடல் ஊனங்களுக்கு ஆளாகின்றனர். வாழ்நாள் முழுவதுமே அவர்கள் வெளியே நடமாட முடியாத நிலைமைக்கும் உள்ளாவதுண்டு. வீதிவிபத்துகளில் காயமடைகின்றவர்களுக்கு மருத்துவ சிகிச்சையளிப்பதற்காக அரசாங்கம் அதிகளவு பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை வாகனவிபத்துகளால் பொருளாதாரத்துக்கும் மறைமுகமாக பாதிப்பு ஏற்படுகின்றது எனலாம்.

நாட்டில் வாகனவிபத்துகள் அதிகரித்து வருவதற்குக் காரணங்கள் உள்ளன. வாகனங்களின் பெருக்கம் அதிகரித்து வருவது முதலாவது காரணமாகும். நாட்டின் வீதிகள் யாவும் சீராக உள்ளது இரண்டாவது காரணம். முன்னரைப் போன்று இல்லாமல் வாகனங்கள் மிகவும் விரைவாகச் செல்வதற்கு இன்றைய நவீன வீதிகளே காரணமாகும். இந்த அதிகரித்த வேகமே மிகமோசமான வாகனவிபத்துகளை ஏற்படுத்துகின்றது.

இவற்றுக்கு அடுத்த காரணங்களாக சாரதிகளின் கவனயீனம், பேருந்துகளுக்கிடையிலான போட்டிகள் போன்ற பல விடயங்களைக் குறிப்பிடலாம். தனியார் பஸ்கள் நாட்டில் அதிகரித்து விட்டன. அதுவும் தூரஇடங்களுக்கான சேவையில் ஈடுபடும் பஸ்கள் அதிகரித்து விட்டன. தனியார் பஸ்கள் அதிகரித்து விட்டதனால் அவற்றுக்கிடையில் போட்டாபோட்டிகளும் அதிகரித்து விட்டன. அடுத்த பயணத்துக்குரிய இடத்தைப் பிடித்து விடுவதற்காக அதிவேகமாக பஸ்ஸைச் செலுத்திச் செல்லும் போது விபத்துகள் தவிர்க்க முடியாதவையாகி விடுகின்றன.

தனியார் பஸ்களின் சாரதிகளில் பலர், வீதியில் பயணம் செய்கின்றவர்களை மனிதர்களாகக் கருதுவதில்லை. மக்களை சாதாரண பிராணிகளாகக் கருதியே வாகனங்களை அலட்சியமாகச் செலுத்துகின்றனர். வீதிக்கடவைக் கோடுகளைக் கூட தனியார் பஸ் சாரதிகள் பலர் கவனத்தில் கொள்வதில்லை. பாதசாரிகள் சமிக்ஞை விளக்குகளைப் பார்த்து வீதியைக் கடக்க முற்படும் போது, வாகனங்களில் மோதுண்டு பலியான சம்பவங்கள் அதிகம் நடந்துள்ளன.

போக்குவரத்து விதிமுறைகளை அலட்சியம் செய்யும் விதத்திலேயே தனியார்பஸ் சாரதிகள் மற்றும் முச்சக்கரவண்டி சாரதிகள் பலர் நடந்து கொள்வதைக் காண முடிகின்றது. நாட்டில் இடம்பெறுகின்ற விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளுக்கு தனியார் பஸ்களும் முச்சக்கரவண்டிகளுமே அதிகளவில் காரணமாக இருப்பதாக வெளிவருகின்ற தகவல்களில் உண்மை இல்லாமலில்லை.

வாகன விபத்துகள் அதிகரித்து வருவது குறித்து போக்குவரத்துப் பொலிசார் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டுமென்று மக்கள் நீண்ட காலமாகவே கோரிக்கை விடுத்து வருகின்றனர். வீதிச்சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள சந்திகளில் கடமையில் நின்று கொண்டு, சமிக்ஞை விளக்குகளை அலட்சியம் செய்கின்ற சாரதிகளுக்கு அபராதம் விதிப்பது மாத்திரமே போக்குவரத்துப் பொலிசாரின் கடமையல்ல. மற்றைய இடங்களில் தவறிழைக்கின்ற சாரதிகள் மீதும் உரிய சட்டநடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் மக்களின் கருத்தாகும்.

மனித உயிர்கள் பெறுமதியானவை. மனித உயிர்களுக்கு மதிப்பளிக்கத் தவறுகின்ற சாரதிகளுக்கு மன்னிப்பு அளிக்கப்படலாகாது!

editor.tkn@lakehouse.lk

# யா/நடேஸ்வரக் கல்லூரியில் திறன் வகுப்பறை திறப்பு விழா

யா/நடேஸ்வரக் கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்கத்தினராலும், ரட்ணம் பவுண்டேஷன் நிறுவனத்தாலும் அன்பளிப்பு செய்யப்பட்ட திறன் வகுப்பறை திறப்பு விழா கடந்த வாரம் பாடசாலையின் முதல்வர் கு. விமலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. ஸ்ரீகுமரன் அவர்களும், சிறப்பு விருந்தினராக லண்டன் பழைய மாணவர் சங்க உறுப்பினர் செ. சண்முகநாதன் அவர்களும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

கல்லூரியின் முதல்வர் தனது உரையில் "மீள்குடியேற்றத்தின் பின்னர் இப்பாடசாலையானது பழைய மாணவர்களினதும் கல்வித் திணைக் களத்தினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உதவித் திட்டங்களுடன் வளங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டு வளர்ந்து வருகின்றது" எனக் குறிப்பிட்டார். பிரதம விருந்தினர் தனது உரையில் பாடசாலையின் வளர்ச்சி பற்றிக் குறிப்பிட்டதுடன், அடிப்படை வளங்கள் ஓரளவு கொண்ட பாடசாலையாக யா/நடேஸ்வரக் கல்லூரி திகழ்கின்றது எனவும் இவ்வளங்களை மாணவர்களும் ஆசிரியர்களும் பயனுடைய வகையில் பயன்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

சிறப்பு விருந்தினர் தனது உரையில், பாடசாலையின் வளர்ச்சிக்காக தம்மால் இயன்ற உதவித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, தொடர்ந்து தங்களது உதவி பாடசாலைக்கு கிடைக்கும் என உறுதி அளித்தார்.

கௌரவ விருந்தினர் தனது உரையில், இவ்வாறான நவீன கற்பித்தல் முறைகள் புகுத்தப்படுவதன் மூலம் ஆசிரியர்களும் மாணவர்களும் நவீன கற்றல் கற்பித்தல் முறைகளுடன் இணைந்ததாக தமது கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தினார். அத்தோடு புதிதாக நிறுவப்பட்ட திறன் பலகையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் மாதிரி வகுப்பு நிகழ்வும் இடம் பெற்றது.







# மொரீஷியஸ் உலகத் தமிழ்ப்பண்பாட்டு மாநாட்டில் டொக்டர் சிதம்பரகுமாருக்கு தமிழ்மாமணி விருது

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், மொரீஷியஸ் முருகன் அறக்கட்டளை, சர்வதேசப் புலம்பெயர் தமிழர் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த பதினாறாவது உலகத் தமிழ் மாநாடு மொரீஷியஸில் செப்டம்பர் 24 இல் ஆரம்பமாகி நடைபெற்றது.

அவுஸ்திரேலியாவில் தமிழ் கலாசார வளர்ச்சிக்காக தொடர்ந்து பாடுபட்டு வரும் டொக்டர் சிதம்பரகுமார் தேவேந்திரம்பிள்ளை இந்த சர்வதேச மாநாட்டில் 'உலக தமிழ்மாமணி விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டார்.





பேராசிரியர் பஞ். இராமலிங்கம், சிறப்புத் தலைவர் வழக்கறிஞர் தேவராஜ் பொன்னம்பலம், மாநாட்டுத் துணைத் தலைவர் மொரீஷியஸ் டொக்டர் ஆறுமுகம் பரசுராமன், மாநாட்டுத் தலைவர் மொரீஷியஸ் வழக்கறிஞர் அமுது செழியன், தலைவர் பொன்.சிறீசிவகன், மாவை தங்கராசா ஆகிய முக்கிய தமிழ் ஆர்வலர்கள் இம்மாநாட்டில் கலந்து சிறப்பித்தனர். இந்த மாநாட்டில் தமிழர் கலைகள் பண்பாடு ஊக்குவிப்பு, தமிழ் ஆண்டு, தமிழ் மொழிக்கல்வி, தமிழர் வரலாற்று ஆவண சேமிப்பு, தூய தமிழ் வழக்கு, தமிழ் செம்மொழி உருவாக்கம், உலகத் தமிழர் ஒற்றுமை பேணல், தமிழ் வழி இறைவழிபாடு, தமிழ் மரபுகளை நிலைப்படுத்துதல், தமிழர் இறையாண்மை, தமிழ்ப்பாதுகாப்பு, தமிழ்க் கலை மீட்பு, தமிழ்க் கல்வி, தமிழர் நிறுவனங்கள் ஒருங்கிணைப்பு, மறைந்த மறைக்கப்பட்ட தமிழர் வரலாற்றுத் தேடல்கள், எதிர்காலத் தமிழினம் எதிர்நோக்கும் சவால்கள், தமிழ் ஊடகங்கள் போன்ற தலைப்புகளில் ஆய்வுரைகள் நிகழ்த்தப்பட்டன.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் மொரீஷியஸ் நாட்டில் வலுவாக செயற்பட்டு வருவதோடு, பல நாடுகளில் கிளைகள் பரப்பி பதிவு பெற்றுச் சிறந்த முறையில் இயங்குகின்றது. உலகளாவிய மாநாடுகள் மூலம் இவ்வியக்கம் தமிழர்களின் கலை பண்பாடுகளை ஊக்குவிப்பதோடு, தமிழ்மொழிக் கல்வி, தமிழர் வரலாறு ஆவணச் சேமிப்பு, தூயதமிழ் வழக்கு தமிழ்ச் செம்மொழி உருவாக்கம், தமிழ்வழி இறைவழிபாடு, வரலாற்று ஆவணச் சேமிப்பு, தமிழ் மரபுகளை நிலைப்படுத்தல், தமிழர் இறையாண்மை, தமிழ்ப் பாதுகாப்பு, தைப்பொங்கல் தமிழர் திருநாள், உலகத் தமிழர்களிடையே ஒற்றுமை பேணல் ஆகிய செயற்பாடுகளில் பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளது.

மொரீஷியஸில் நிகழும் பதினாறாவது உலகத் தமிழ் விழாவாக இம்மாநாட்டில் தமிழர் வரலாற்றுத் தொன்மை ஆய்வரங்கமும் பிரபல கவிஞர்கள் பங்கு கொள்ளும் கவியரங்கமும் அரங்கமும் அதிர்வும் என்னும் பல்சுவை நிகழ்வும் நடனம், இன்னிசை பரதம், நாடகம், நாட்டுக்கூத்து உட்பட பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன. தமிழ் அறிஞர்களின் துறைசார்ந்த புத்தக ஆய்வுகள் இந்த மகாநாட்டு இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் நான்காவது ஒன்றுகூடல் நிகழ்வு

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் 1991/1992 புலன அணியினரின் நான்காவது ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது. புலன அணியின் தலைவர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், திருமலை தொடக்கம் திருக்கோவில் வரையிலான 42 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

விசேட அதிதிகளாக முன்னாள் அதிபர் சிவஞானம் அகிலேஷ்வரன் மற்றும் குடும்ப உறுப்பினராக முன்னாள் அதிபர் கே. பாஸ்கரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

அதேவேளை, மட்டக்களப்பு ஊறணியைச் சேர்ந்த புலன உறுப்பினரான கவிமாமணி புண்ணியமூர்த்தி அஞ்சலாதேவி தம்பதியினரின் 29 ஆவது திருமணநாள் விழாவும் சிறப்பிக்கப்பட்டது. அருட்கவியரசு ஆ.புட்கரன் திருமணநாள் வாழ்த்தை யாத்து பாடி வழங்கினார். பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டு லண்டன் நண்டு நடா மற்றும் உறுப்பினர்களின் அன்பளிப்புகள் வழங்கி வைக்கப்பட்டன.





கூடவே, அணியின் பாடகி ஆசிரியை சுகுணமதியின் தாயாரின் இறுதிக் கிரியையிலும் புலன அணியினர் கலந்து கொண்டார்கள்.

**காரைதீவு குறூப் நிருபர்...**

# நாவிதன்வெளி பிரதேசத்தில் வாழ்வாதார உதவி நிகழ்வு

பெரெண்டினா நிறுவனத்தினால் வாடிக்கையாளர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கும் 'உங்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பும் லைஃப் லைன் நிகழ்வு கல்முனை கிளையின் ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் பி. பிரணவரூபன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்ததுடன், வாடிக்கையாளர்களுக்கான வாழ்வாதார உதவி கொடுப்பனவுகளையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வின் போது பெரெண்டினா நுண்நிதி நிறுவன பிரதேச முகாமையாளர் பா.பிரதிலிபன், பெரெண்டினா நிறுவனத்தின் கல்முனை முகாமையாளர் கே.கோபிகரன், வியாபாரஅபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஜெயரூபன் மற்றும் பெரண்டினா ஊழியர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். முதற்கட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் இந்நிகழ்வில் 50 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், 1550 பயனாளிகளுக்காக மொத்தமாக சுமார் 5.5 மில்லியன் ரூபா நிதி நாவிதன்வெளி மற்றும் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் 6 கிளைகளுடன் 13000 இற்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களைக் கொண்ட இந்நிறுவனத்தினால் வாழைச்சேனை, செங்கலடி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி, கல்முனை மற்றும் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு மொத்தமாக 45 மில்லியன் ரூபா நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

பெரெண்டினா தன்னார்வ மற்றும் நிதி நிறுவனத்தின் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு செயற்திட்டங்கள் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் மாவட்டத்தில் போசாக்கு குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு பல்வேறு செயற்றிட்டம் பெரண்டினா நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றமைகுறிப்பிடத் தக்கதாகும்.





**வி.ரி.சகாதேவராஜா...**
காரைதீவு குறூப் நிருபர்

# வெலிகம அறபாவில் மீண்டும் ஒரு நாள் பள்ளிக்கு நிகழ்ச்சி

வெலிகம மண்ணின் அறிவுத் தாய் இற்றைக்கு 135 ஆண்டுக்கு முன் 1888 ஆம் ஆண்டு செய்யிது முஸ்தபா நொத்தாரிஸ் ஹாஜியாரின் வீட்டு முன்றலில் ஆரம்பித்து வைக்கப்பட்ட 'வரண்டா ஸ்கூலில்' வெலிகமை மண்ணின் அறிவுத் தாய் அறபாவின் பிரசவம் நிகழ்ந்தது.

சிறுமக்கம் என்று பெயர் பெற்ற வெலிகமையிலே அக்காலத்தில் இயங்கிவந்த ஹிதாயத் பவுன்டேசன் அமைப்பினால் அறபாவுக்கான முதற்காணி 1905 இல் அன்பளிப்பு செய்யப்பட்டது. 1946 ஆம் ஆண்டு முதல் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூல வெவ்வேறு பிரிவுகளாக தனித்தனி அதிபர்கள் கொண்டு இப் பாடசாலை இயங்கி வந்தது.

1961 ஆம் ஆண்டு அறபாவின் பௌதீக வளர்ச்சியில் இன்னுமொரு வளர்ச்சிப்படி நடந்தது. எமது வெலிகமை ஹெட்டிவத்தை பிரதேசத்திலே வெபா அதிபரின் முயற்சியிலும் அப்போதைய கல்வி அமைச்சர் பதியுதீன் மஹ்மூத்தின் உறுதுணையுடனும் பாரிய கல்விக் கூடமாக உருமாறியது. வெலிகமை முஸ்லிம் மஹா வித்தியாலயம் என்று அதுவரை அழைக்கப்பட்ட பாடசாலை 'அறபா' என்ற கம்பீர நாமத்துடன் தலைநிமிர்ந்து நிற்கத் தொடங்கியது.

1968 ஆம் ஆண்டு முதல் அறபா ஆரம்பப் பிரிவு, சிரேஷ்ட பிரிவென வெவ்வேறாக இயங்கத் தொடங்கியது. 1970 ஆம் ஆண்டுகளில் அறபா இலங்கையின் பல்வேறு பிரதேச மாணவர்களை உள்வாங்கி மிலிரத் தொடங்கிய காலமதில் தற்காலிக மாணவர் விடுதி ஏற்பாட்டுடன் விஞ்ஞானப் பிரிவும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1980 ஆம் ஆண்டுகளில் எமது பாடசாலை அறபா மத்திய கல்லூரியாக தர முயற்றப்பட்டது. இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக ஒரு முஸ்லிம் பாடசாலையில் நடைபெற்ற மஹபொல நிகழ்வு என்றால் அது 1987 ஆம் ஆண்டு எமது கல்லூரியில் நடைபெற்றதை குறிப்பிட முடியும். மேலும் அதே ஆண்டிலேயே பாடசாலை பள்ளிவாசல் நிர்மாணப் பணியும் நடைபெற்றது.






இவ்வாறு வளர்ச்சிப் பாதையில் தடம் பதித்து வந்த அறபா 1994 ஆம் ஆண்டு தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டதுடன் தேசிய மீலாத் விழா 1995 இல் நடைபெற்றது. இதன்போது இப் பாடசாலைக்கு 10 மில்லியனுக்கு மேற்பட்ட உதவிகள் கிடைக்கப் பெற்றது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

2007 ஆம் ஆண்டு முதல் மீண்டும் ஆங்கிலமொழி மூல வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப் பட்டதுடன் 2012 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் ஆயிரம் பாடசாலை திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் கிடைக்கப் பெற்றதுடன் 125 ஆம் ஆண்டு நிறைவு விழா வெகு விமர்சையாக 2014 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டு இற்றைக்கு 135 வருட பெருமைக்குரிய வரலாற்றுடன் அறபா கம்பீரத்துடன் தலை நிமிர்ந்து நின்றது.

அறபாவின் வரலாற்றைப் போன்றே அண்மைக் காலமாக எமது பாடசாலையின் கல்வி, விளையாட்டு மற்றும் ஏனைய இணைப் பாடவிதான செயற்பாடுகளில் முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

ஒவ்வொரு வருடமும் பல மாணவர்கள் மருத்துவம், பொறியியல், வணிகம் மற்றும் கலைப்பிரிவுகளில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகி செல்கின்றனர். இறுதியாக நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இம்முறை நான்கு மாணவர்கள் மருத்துவத் துறைக்கும் ஒருவர் பொறியியல் துறைக்கும் ஆறு மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளுடன் தொழில்நுட்பத் துறையிலும் மேலும் பலர் கலை மற்றும் வணிகப் பிரிவிலும் பல்கலைக்கழகம் தெரிவாகியுள்ளனர்.

இம்முறை பரீட்சை பெறுபேறுகளில் பல்கலைக்கழக நுழைவுத் தகைமையுடையவர்களாக 78 சதவீதமானவர்கள் காணப்படுகிறார்கள்.

கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டுத் துறையிலும் எமது மாணவர்கள் திறமைகளை காட்டி வருகின்றனர். பாடசாலையின் கால்பந்தாட்ட அணி தென் மாகாண ரீதியான போட்டிகளில் வெற்றியீட்டி 18 வயதுக்கு கீழ் மற்றும் 16 வயதுக்கு கீழ் விளையாடும் அணிகள் அடுத்த மாதம் நடைபெறும். அகில இலங்கை போட்டிகளுக்காக தயார் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அத்தோடு தமிழ் மொழித் தினப் போட்டி, இரண்டாம் மொழி சிங்கள மொழிப் போட்டி, ஆங்கில மொழிப் போட்டிகளில் வலய மட்டங்களில் அதிக இடங்களை பெற்றுக் கொண்டுள்ளனர்.

எவ்வாறாயினும் எமது பாடசாலை காலத்தின் தேவைக்கு ஏற்ப பல குறைபாடுகளுடன் இயங்கி வருவது குறிப்பிடப்படவேண்டிய ஒரு விடயமாகும். புல பௌதீக வள குறைபாடுகள், கல்வி மற்றும் விளையாட்டுத் துறைசார்ந்த தேவைகள் காணப்படுகின்றன.

எனவே இத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கில் மீண்டும் ஒருநாள் பள்ளிக்கு என்ற நிகழ்ச்சியை பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்துள்ளார்கள்.

இந்நிகழ்வு செப்டம்பர் 30 ஆம் திகதி ஆண்களுக்காகவும் ஒக்டோபர் 1 ஆம் திகதி பெண்களுக்காகவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இரு தினங்களிலும் காலை 06.30 மணி முதல் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். அனைத்து பழைய மாணவர்களும் ஆரம்ப பிரிவாகிய வெலிகம முஸ்லிம் ஆரம்பப் பாடசாலையில் ஒன்று சேர்ந்து நடைபவனியாக அறபா தேசிய பாடசாலைக்கு வருகை தருவார்கள்.

அதனை தொடர்ந்து காலைக் கூட்டமும் உடற் பயிற்சியும் நடைபெற்று பின்னர் வகுப்பறைக்கு பாடங்களுக்காக செல்வார்கள். அதிலே தாம் விரும்பிய ஆசிரியர் ஒருவரை தேர்வு செய்து வகுப்பறை நிகழ்வு நடைபெறும். பின்னர் இடைவேளையைத் தொடர்ந்து 'பழைய மாணவர் குழுக்கள் பாடசாலைக்கு பங்களிப்பு செய்யும் நிகழ்வு நடைபெறும்.

இதனை தொடர்ந்து அழைப்பு விடுக்கப்பட்ட அறபாவின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்களின் கௌரவிப்பு நிகழ்வு நடைபெறும். பகல் உணவைத் தொடர்ந்து பழைய மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் அறபாவின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்கள் கலந்து கொள்ளலாம். நீங்களும் வெலிகம அறபாவின் பழைய மாணவராயின் அல்லது முன்னாள் ஆசிரியராயின் 0743307051 அல்லது 0701490350 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு அறபா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# சீனன் கோட்டையில் மீலாத் மௌலித் மஜ்லிஸ்

**பேருவளை பீ.எம் முக்தார்**

இறைந்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹூஅலைஹிவஸல்லம் அவர்கள் அவதரித்த இந்த புனித ரபியுனில் அவ்வல் மாதத்தினை முன்னிட்டு பேருவளை சீனன் கோட்டை கட்டுக்குருந்தை நவ்பல் ஜாபிர் மாவத்தை இப்றாஹீமிய்யா ஷாதுலிய்யா ஸாவியாவில் வருடாந்தம் நடைபெறும் ஸூப்ஹான மௌலித் மஜ்லிஸ் இன்று 30 ஆம் திகதி (30.09.2023) மாலை அஸர் தொழுகையோடு ஆரம்பமாகும்.



சீனன் கோட்டைபள்ளிச் சங்கத்தின் வழிகாட்டலின் கீழ் மேற்படி ஸாவியா பரிபாலன கமிட்டி பிரதேச ஜமாஅத்தாரின் பங்களிப்புடன் நடைபெறும் இம் மஜ்லிஸில் பிரபல பேச்சாளரும் கண்டி மஸ்ஜிதுர் ரஹ்மான் பள்ளிவாசல் பிரதம கதீபுமான மௌலவி அமீர் ஹம்ஸா (ரப்பானி) விஷேட சொற்பொழிவாற்றுவார்.

ஸாவியாவின் பிரதம இமாம் மௌலவி முஹம்மத் முத்தலிப் (பாரி)தலைமையில் நடைபெறும் இம்மஜ்லிஸில் கலீபதுஷ் ஷாதுலிகளான மௌலவிஎம்.எம் ஸைனுலாப்தீன் (பஹ்ஜி), மௌலவிஎம். ஐ.எம் ரபீக் (பஹ்ஜி) ஆகியோர் திக்ர் (ஹழரா) மஜ்லிஸை நடாத்தி வைப்பர்.

அஸர் தொழுகையைத் தொடர்ந்து ஸூப்ஹானமௌலித் மஜ்லிஸூம் மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து வலீபாயா கூதிய்யா மற்றும் திக்ர் (ஹழரா) நிகழ்வும் ஹரீரிமௌலிதும் துஆப் பிராத்தனையும் இடம்பெறுவதோடு இஷாத் தொழுகையின் பின்னர் விஷேட மார்க்கச் சொற்பொழிவும் நடைபெறும்.

சீனன் கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் ஏ.எச்.எம் முக்தார் ஹாஜியார் உட்பட பள்ளிச் சங்க உறுப்பினர்கள், இப்றாஹீமிய்யா ஸாவியா பரிபாலன குழு உறுப்பினர்கள், உலமாக்கள், இஹ்வான்கள் நிகழ்வில் கலந்து கொள்வர் என ஏற்பாட்டுக் குழுசார்பில் முப்தாஸ் மும்தாஸ் தெரிவித்தார்.

# புனித அல்குர்ஆன் அனைத்து மதத்தவர்களுக்கும் பொதுவான நல் வழிகாட்டியாகும்

## கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்

**(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)**

புனித அல்குர்ஆன் இஸ்லாமியர்களுக்கு மாத்திரமல்ல அனைத்து மதத்தவர்களுக்கும் ஒரு பொதுவான நல்ல வழிகாட்டியாகும். மனிதனின் வாழ்க்கையில் ஒழுக்கத்தையும் அறநெறியை கற்பிக்கும் ஒரு புனித நூலாகும் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

சம்மாந்துறை அஹதிய்யா (முஸ்லிம் தஹம்) பாடசாலைகளின் கூட்டிணையத்தின் ஏற்பாட்டில் அஹதிய்யா இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி சம்மாந்துறை அப்துல் மஜீத் நகர மண்டபத்தில் நடைபெற்றது.



அம்பாறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனத்தின் தலைவர் இசட்.எம். றிஸ்வி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அறநெறிப் பாடசாலைகள் மனிதத்துவத்தை கட்டியெழுப்புகின்ற கல்விக்கூடமாகும். மாணவர்களின் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான அடிப்படை அறிவை ஆளுமையை முன்னெடுத்துச் செல்கின்றது.

இதேபோன்று திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் அறநெறி பாடசாலைகளையும், மாணவர்களை அபிவிருத்தி செய்ய கிழக்கு மாகாண சபை எப்போதும் தயாராகவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் பதில் செயலாளர் ஏ.மன்சூர், கிழக்கு மாகாண நிர்வாகத்துக்கான பிரதி பிரதம செயலாளர் ஏ.நஸீர், கிழக்கு மாகாண ஆளணி மற்றும் பயிற்சி பிரிவுக்கான பிரதம செயலாளர் திருமதி றிபா உம்மா ஜலீல், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எம்.ஹனீபா, கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் எம்.ஐ.றணுஸ், சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்ஷூறாவின் தலைவர் அஷ்ஷேய்க் எம்.ஐ.அமீர், சம்மாந்துறை ஜம்இயத்துல் உலாமாவின் தலைவர் அஷ்ஷேய்க் எம்.எச். பஷீர், சர்வ சமய சம்மேளனத்தின் செயலாளர் சகாதேவராஜா, உலமாக்கள், கல்விமான்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கிழக்கின் குரல்

# அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்

**(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)**

அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துவருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.



அட்டாளைச்சேனை 9ஆம் கிராமப் பிரிவில் நேற்று(29.09.2023) நடுநிசியில் உட்புகுந்த காட்டு யானைகள் அங்கு பலரது மதில் சுவர்களை உடைத்து தோட்டப்பயிர்களை துவம்சம் செய்துள்ளது.

இதன் காரணமாக இப்பிரதேச மக்கள் பீதி அடைந்துள்ளனர். அவர்களின் பெறுமதியான சொத்துகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் சம்பு நகர், முல்லைத்தீவு, பாலமுனை கிறா நகர், ஒலுவில் அஷ்ரப் கிராமங்களிலுள்ள மக்கள் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

காட்டு யானைகளின் வருகையை கட்டுப்படுத்த சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மணிவிழா நூல் வெளியீடு

**(துறை நீலாவணை நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும். ரெலோ அமைப்பின் பொதுச் செயலாளருமான கோ. கருணாகரனின் (ஜனாவின்) 40 வருட போராட்ட , அரசியல் வரலாறு கூறும் "ஜனாவின் வாக்குமூலம்" எனும் மணிவிழா மலர் வெளியீடும், விழா நாயகனின் 60 ஆவது பிறந்ததின விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.31 மணியளவில் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான். பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன். தர்மலிங்கம் சித்தார்த்தன். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன். கி. துரைராஜசிங்கம், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெறவுள்ளது.

# சமூக பங்குபற்றுதலுடன் கூடிய கல்வி அபிவிருத்தி – அங்குரார்ப்பண நிகழ்வு

**(கிண்ணியா தினகரன் நிருபர்)**

முஸ்லிம் எய்ட் சிறிலங்கா நிறுவனத்தின் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட பங்குபற்றுதலுடன் கூடிய கல்வி அபிவிருத்தி கட்டம் III அங்குரார்பண நிகழ்வு கிண்ணியா வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் நீண்டகாலமாக கல்வி அடைவில் பின்தங்கிய நிலையில் இருந்து வருகின்ற கிண்ணியா கல்வி வலயத்திலுள்ள கல்வி மற்றும் கல்வி அடைவுகளைப் பாதிக்கின்ற பல்வேறு தேவைகள் உடைய 13 பாடசாலைகளில் மேற்படி தொனிப்பொருளில் அமைந்த நிகழ்ச்சித்திட்டம் மூன்றாம் கட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது.

முதலாவது கட்டத்தில் 5 பாடசாலைகளும் இரண்டாவது கட்டத்தில் 13 பாடசாலைகளும் இத்தொடர் நிகழ்ச்சித்திட்டத்தில் பயன்பெற்றன.



இலங்கை அரசாங்கத்தின் கல்விக் கொள்கைளை அடியொட்டி நிலைபேறான அபிவிருத்தி இலக்கை – 4 (Sustainable Development Goal 4) பிரதிபலிக்கும் முகமாக முஸ்லிம் எய்ட் சிறிலங்கா 13 பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டினை உறுதி செய்யும் வகையில், கட்டுமானம் சார்ந்த மற்றும் கற்றல், கற்பித்தல் ஊக்கப்படுத்தல் சார்ந்த செயற்பாடுகளை அடையாளம் காணப்பட்டு, வள ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.



நவீன கல்விச்சூழலில் மாணவர்கள் உட்பட கல்விச் சமூகம் எதிர்கொள்கின்ற பல்வேறு சவால்களை எதிர்கொள்ளக்கூடியதாக இக்கருத்திட்டம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம், கிண்ணியா வலயக் கல்விப்பணிப்பாளர் ஏ.நசூகர்கான், முஸ்லிம் எய்ட் சிறிலங்கா நிறுவனத்தின் வதிவிடப்பணிப்பாளர் A.C. பைஸர்கான், பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் முனீர் முஸ்தபா, திருமலை மாவட்டத்தில் கல்வி அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், ஊர்ப்பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் முக்கிய அம்சமாக இம்மாத இறுதியில் ஓய்வு பெற்றுச்செல்லும் கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம் முஸ்லிம் எய்ட் சிறிலங்கா நிறுவனத்தால் பாராட்டுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.




பேருவளை நகர முஸ்லிம் வியாபாரிகள் ஒன்றிணைந்து நடாத்திய மீலாதுன் நபி விழா மௌலித் மஜ்லிஸ் 28 ஆம் திகதி நவீன சந்தை மேல் மாடியில் நடைபெற்றது. மக்கொனை ஜும்ஆ பள்ளிவாசல் கதீப் மௌலவி எம்.என்.எம். மிஸ்பாஹ் (பின்னூரி) விஷேட சொற்பொழிவாற்றினார். பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார, பேருவளை நகர சபை செயலாளர் திருமதி எம். டப்ளியு குணவர்தன, பேருவளை நகர சபை வருமான அதிகாரி டக்ளஸ், களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனத் தலைவர் எம்.எச்.எம் உவைன் ஹாஜியார், நகர சபை பொதுச் சுகாதார பரிசோதகர் தாரக, முகந்தமுஷ் ஷாதுலி மும்தாஜ் சமீம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். பிரதேசத்தில் இன உறவை கட்டியெழுப்பும் நோக்கோடு ஏற்பாடு செய்யப்பட்ட அன்னதானம் வழங்கும் நிகழ்வில் மாற்று மத சகோதரர்களும் பங்கு பற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது. பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொதுப்பதிகாரி பெரேரா, மௌளவி காரி எம்.எஸ்.எம் ரஸீன் (கபூரி) உட்பட உலமாக்கள், நகர வர்த்தகர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

படங்கள்: பேருவளை பீ.எம் முக்தார்.




அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்கப் பேரவை ரபிஉல் அவ்வல் மாதத்தை முன்னிட்டு தெமட்டகொடயில் அமைந்துள்ள பேரவையின் தலைமைக் காரியாலய ஏ.எம்.ஏ.அசீஸ் கேட்போர் கூடத்தில் பேரவையின் மீலாதுன் நபி விழா தேசிய தலைவர் இஹ்ஸான் ஏ ஹமீட் தலைமையில் (28) சிறப்பாக இடம் பெற்றது. இதன்போது நபியவர்களுக்காக குர்ஆன் புகழ்மாலை ஓதப்பட்டதுடன், மௌலீது வைபவமும் இடம்பெற்றது. இதன்போது மௌலவி இஹ்ஸான் அஹமடினால் (ஹுமைதி) நபியவர்களின் வாழ்க்கை வரலாறு அவர்கள் முழு மனித சமுதாயத்திற்கும் காட்டித்தந்த நற்பண்புகள் அவர்களின் தியாகம் தொடர்பான விசேட உரை நிகழ்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பேரவையின் சமய விவகாரங்களுக்கான தலைவர் தௌபீக் சுபைர், சிரேஷ்ட ஊடகவியலாளர் மொகமட் ரசூல் டீன், முன்னாள் தலைவர் காலித் பாறுக், சட்டத்தரணி அஸ்ரப் ரூமி, பேரவையின் அங்கத்தவர்கள், முன்னாள் தலைவர்கள், உலமாக்கள் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

ஏ.எஸ்.எம்.ஜாவித்

# 'வெய்யில் மனிதர்கள்' நூல் அறிமுக விழா



சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளரும் எழுத்தாளருமான அஷ்ரஃப் சிஹாப்தீன் மொழி பெயர்த்த 'வெய்யில் மனிதர்கள்' எனும் நூலின் அறிமுக விழா எதிர்வரும் 07ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கொழும்பு 09, தெமட்டகொடை வீதி, இல. 77 இல் அமைந்துள்ள தாருல் ஈமான் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை நெய்னார் சமூக நலக் காப்பகத்தின் ஏற்பாட்டிலும் மூத்த எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமான கவிஞர் அல் அஸூமத் தலைமையிலும் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைக்கான பலஸ்தீனத் தூதுவர் கலாநிதி ஸூஹைர் எச்.எம்.தார் ஸெய்த் கலந்துகொள்ளவுள்ளார்.

விசேட அதிதிகளாக பலஸ்தீனத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் ஹிஷாம் அபூ தாஹா, முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, சிரேஷ்ட நிர்வாக அதிகாரி ஏ.பி.எம். அஷ்ரஃப் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். கௌரவ அதிதிகளாக அரச, தனியார்துறை முக்கியஸ்தர்கள், சிரேஷ்ட இலக்கியவாதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் தொடர்பான திறனாய்வை சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளர் இளையதம்பி தயானந்தா, எழுத்தாளர் ஷாகிறா இஸ்ஸதீன், கவிஞர் நாச்சியாதீவு பர்வீன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நூல் முதல் பிரதியை பத்திரிகையாளரும் எழுத்தாளருமான பஷீர் அலி பெற்றுக்கொள்ளவுள்ளார். விசேட பிரதியை இலங்கை நெய்னார் சமூக நலக் காப்பகத்தின் தலைவர் இம்ரான் நெய்னார் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

பிரபல பலஸ்தீன எழுத்தாளர் கஸ்ஸான் கனஃபானி எழுதிய 'அர்ரிஜாலு ஃபிஷ்ஷம்ஸ்' எனும் அரபுமொழி நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பை கொண்டு இந்த நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு சிறந்த மொழி பெயர்ப்பு நாவலுக்கான அரச சாஹித்திய விருதையும் இந்த நூல் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு மற்றும் பேராதனை...

கொழும்பு மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்கள் முறையே, உலகின் சிறந்த பல்கலைக்கழக தரவரிசையில் 1,001 முதல் 1,200 இடங்களுக்குள் இடம்பிடித்துள்ளன.

மேற்படி தரவரிசையின்படி முதலாவது இடத்தை ஐக்கிய இராச்சியத்தின் ஒக்ஸ்பேர்ட் பல்கலைக்கழகம் பிடித்துள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான உலக பல்கலைக்கழக தரவரிசையில் முதல் 1,000 இடங்களுக்குள் இலங்கையின் இரண்டு பல்கலைக்கழகங்கள் இடம்பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

## தெஹிவளை Zoo இல்...

முதல் மாலை 5.00 மணிவரை தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக தெரிவித்தது.

## கார் தலைகீழாக...

பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தின் போது சாரதி மாத்திரமே காரில் இருந்ததால், அவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## அபிவிருத்தியை நோக்கி செல்ல...

இந்த வைபவத்தில் சீனத் தூதுவர் மேலும் தெரிவித்த போது,

"சீனாவின் அதிவேக அபிவிருத்திப் பயணத்தை இலங்கை உட்பட அனைத்து நாடுகளும் வரவேற்கின்றன. சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கினால் முன்மொழியப்பட்ட One Belt One Road அபிவிருத்தித் திட்டத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை நாம் இந்த ஆண்டு கொண்டாடுகிறோம். கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை, தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம், ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கொழும்புத் துறைமுக நகரம் போன்ற எமது இரு நாடுகளுக்கும் இடையிலான பிரதான திட்டங்களில் கவனம் செலுத்துவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த சில தசாப்தங்களில் இலங்கை தொடர்பான சீனாவின் நட்புக் கொள்கையானது அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் இலங்கையின் அனைத்து மக்களுக்கும் இருந்ததுடன், ஒருமைப்பாடு மற்றும் ஸ்திரத்தன்மையையும் பேணி வருகின்றோம். குறிப்பாக, கடந்த வருடம் இலங்கை பொருளாதார சவால்களை எதிர்கொண்ட போது, சீனா தனது ஆதரவை இலங்கைக்கு முழுமையாக வழங்கியது. சீனா அவசர உதவிகளை வழங்கியது மட்டுமன்றி, இலங்கை எதிர்நோக்கும் கடன் நெருக்கடியை சரியான முறையில் கையாள்வதற்காக சீனா தனது ஆதரவையும் இலங்கைக்கு வழங்கியுள்ளது" எனத் தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, டக்ளஸ் தேவானந்தா, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## 'நிபா' வைரஸ் பரவிய...

பாதிக்கப்பட்ட குழந்தைகள் இருவரும் தற்போது லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக கூறப்பட்டுள்ளது.

ஆயினும், இந்த வைரஸ் தொற்றுக்கு உள்ளானதாக சந்தேகிக்கப்படும் எவரும் இந்நாட்டில் பதிவாகவில்லையெனவும், அவர் தெரிவித்தார். இதன் காரணமாக தற்போதுள்ள நோய்களுக்கு சிகிச்சை பெற மக்கள் பயப்பட வேண்டாமெனவும், மருத்துவர் மேலும் தெரிவித்தார்.

## கஸகஸ்தான் ஜனாதிபதியுடன்...

'உலகளாவிய பொருளாதார மாற்றங்களை எதிர்கொள்வதில் கஸகஸ்தானின் பங்கு' எனும் தலைப்பில் அரச தலைவர் கூட்டத்தொடரானது, கஸகஸ்தான் ஜனாதிபதி Kassym Jomart Tokayev தலைமையில் 'Berlin Global' மாநாட்டுக்கு இணைந்த வகையில் நடைபெற்றதுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இதில் இணைந்துகொண்டார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

## பக்தர்களுக்காக...

உரிய அனுமதிச்சீட்டு பெறும் கருமபீடங்கள் மாலை 6.00 மணி முதல் மறுநாள் முற்பகல் 10.00 மணிவரை திறக்கப்பட்டிருக்குமெனவும், வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்தது. சிவனொளிபாத மலை சரணாலயத்தினுள் நுழையும் யாத்திரிகர்கள் தொடர்பாக வனவிலங்கு அதிகாரிகள் அவதானத்துடன் இருப்பதாகவும், அத்திணைக்களம் மேலும் தெரிவித்தது.

இதேவேளை குருவிட்ட, தெஹனகந்த மற்றும் மரிகொட ஆகிய பாதைகள் பருவ காலத்தில் மூடப்படுமென, வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்தது.

விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் பயணச்சீட்டு பெறாமல், சிவனொளிபாத மலை சரணாலயத்தினுள் பிரவேசிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அத்திணைக்களம் தெரிவித்தது.

## பல்நோக்கு உதவியாளர்கள்...

100,000 வேலைத்திட்டத்தின் கீழ் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் பயிற்சியாளர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன.

இங்கு இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர மேலும் தெரிவித்த போது,

"சப்ரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் பல்நோக்கு உதவியாளர்களுக்கான முதற்கட்ட நியமனங்கள் கேகாலையில் வழங்கப்படுகின்றன. 2020ஆம் ஆண்டில் 34,700 பல்நோக்கு உதவியாளர்களை பயிற்சியாளர்களாக அரசாங்கம் நியமித்தது. தற்போது 29,000 பேர் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோருக்கு அரச நிறுவனங்களில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ளவர்களுக்கு மிக விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படும். இந்த வேலைத்திட்டத்தை அடுத்த மாதத்துக்குள் நிறைவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக பிரதமருடன் கலந்துரையாடல் நடைபெற்று வருகின்றது.

ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தப்பட்டு, 10 – 15 வருடங்களாக சேவையாற்றிய 3,000 பேரை உறுதிப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

"நிரந்தர நியமனம் பெற்ற அனைவருக்கும் அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் நியமனம் வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். மீதமுள்ள அனைத்து வெற்றிடங்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதற்காக அவர்கள் அருகிலுள்ள பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும். அதற்கான நியமனங்கள் தயாராகி வருகின்றன. இப்பணியை இந்த ஆண்டு நவம்பர் மாதத்துக்குள் நிறைவு செய்ய எண்ணியுள்ளோம்" எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், கேகாலை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் ராஜிகா விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான உதயகாந்த குணதிலக, சுதத் மஞ்சுள, சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளர் சுஜித் சஞ்சய், கேகாலை மாவட்ட செயலாளர் மற்றும் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## இறக்குமதி தடைகள்...

வாகன இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

திறந்த பொருளாதார கொள்கைக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்குவதால், இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. நாட்டின் அந்நிய செலாவணியின் கையிருப்பை கருத்திற்கொண்டே இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

தற்போதைய நிலைமையில் வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாட்டை தளர்த்துவதற்கான சந்தர்ப்பம் இல்லை.

எதிர்வரும் காலப்பகுதியில் அந்நிய செலாவணியின் கையிருப்பின் அடிப்படையில் வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை படிப்படியாக நீக்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்படுமெனவும், பதில் நிதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## புத்தளத்தில் ஒரே வாரத்தில்...

அத்துடன், இச்சந்தேகநபர்களிடமிருந்து கப் ரக வாகனம், லொறி, டிங்கி இயந்திரப்படகு மற்றும் மோட்டார் சைக்கிளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

கற்பிட்டியைச் சேர்ந்த 24, 25, 45 வயதுடைய சந்தேகநபர்களே கைது செய்யப்பட்டதாக, கடற்படையினர் தெரிவித்தனர்.

கற்பிட்டி, இலந்தையடி கடற்கரை பிரதேசத்தில் வடமேற்கு கடற்படை கட்டளைக்கு சொந்தமான தம்பபண்ணி கடற்படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது, 70 பொதிகளில் அடைக்கப்பட்ட 2,223 கிலோகிராம் பீடி இலைகளுடன், மோட்டார் சைக்கிளொன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, கற்பிட்டி வன்னிமுந்தல் கடற்கரை பிரதேசத்தில் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது, 19 உரப்பைகளில் அடைக்கப்பட்ட 639 கிலோகிராம் பீடி இலைகள் மற்றும் டிங்கி இயந்திரப் படகொன்றுடன், இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

தளுவ கடற்கரை பிரதேசத்தில் கடந்த செவ்வாய் (26) இரவு சந்தேகத்துக்குரிய முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியொன்றை கடற்படையினர் சோதனை செய்த போது, அதிலிருந்து 1,236 கிலோ 500 கிராம் பீடி இலைகளுடன், இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட பீடி இலைகள், லொறி, கப் ரக வாகனம், டிங்கி இயந்திரப்படகு ஆகியவற்றுடன் சந்தேகநபர்களை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க அலுவலகத்தினரிடமும் மதுரங்குளி பொலிஸாரிடமும் ஒப்படைக்கவுள்ளதாகவும், கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

## மின் கட்டண அதிகரிப்புக்கு...

வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளதாக, இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் நரேந்திர டி சில்வா தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய கடும் வரட்சி காரணமாக மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கான உற்பத்தி செலவுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இந்தக் கட்டண அதிகரிப்பை மேற்கொள்ளவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் இந்த வேண்டுகோள் தொடர்பாக கருத்து தெரிவித்த பொது பயன்பாட்டு ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ, இந்த வேண்டுகோள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை மின்சார தனியார் நிறுவனமான லெகோ நிறுவனமானது, இந்த மாதத்திலிருந்து மின் கட்டணத்தில் நூற்றுக்கு 2.5 சதவீத சமூக பாதுகாப்பு வரியை அறவிடுவதற்கு தீர்மானித்துள்ளது.

அந்த வகையில், இம்மாதம் 8ஆம் திகதியிலிருந்து இதை நடைமுறைப்படுத்தியுள்ளதுடன், மின் பாவனையாளர்களின் அடுத்த மாத கட்டண பட்டியலில் இது உள்ளடக்கப்படுமெனவும், லெகோ நிறுவனம் தெரிவித்தது.

இந்த நிறுவனத்தின் மின் பாவனையாளர்களாக நாட்டில் ஆறு இலட்சம் பேர் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் மழையுடனான...

மாவட்டங்களின் சில இடங்களிலும் 50 மில்லிமீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய மலைப் பிராந்தியங்களின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு 40 முதல் 45 கிலோமீற்றர் வேகத்தில் அடிக்கடி ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்பு உள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி, மாத்தறையினூடாக ஹம்பாந்தோட்டைவரையான கடல் பிராந்தியங்களில் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசும்.

புத்தளம் தொடக்கம் மன்னாரினூடாக காங்கேசன்துறைவரையும் ஹம்பாந்தோட்டை தொடக்கம் பொத்துவில்வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 50 முதல் 60 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக்கூடும்.

புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி, மாத்தறையினூடாக ஹம்பாந்தோட்டைவரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் இடைக்கிடையே காற்று அதிகரித்து வீசக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் கடல் கொந்தளிப்பாக காணப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

மேலும், இடியுடன் மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன், அவ்வேளைகளில் கடல் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பாக காணப்படுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்களை அவதானத்துடன் இருக்குமாறும், அவர் கேட்டுக் கொண்டார்.

## தனுஷ்க குணதிலக மீண்டும் ...

ஒக்டோபர் 2ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்ற அவர், 360 தினங்களுக்கு பின்னர் மீண்டும் நாட்டுக்கு வரவுள்ளதாகவும், அந்த அமைச்சு தெரிவித்தது.

இந்நிலையில், அவருக்கு எதிராக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் விதித்துள்ள தடையை நீக்குவது தொடர்பாக பரிசீலித்து வருவதாகவும், விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

அஸ்திரேலியாவில் பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியாக குற்றம் சுமத்தப்பட்டு, தனுஷ்க குணதிலக கடந்த நவம்பர் 6ஆம் திகதி அதிகாலை சிட்னியில் கைது செய்யப்பட்டிருந்தார்.

2022ஆம் ஆண்டு நவம்பரில் 29 வயதுடைய பெண் ஒருவரை தனுஷ்க குணதிலக சந்தித்து பேசியதுடன், அந்தப் பெண்ணுடன் அவர் பழகி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, அவருக்கு எதிராக அந்த நாட்டின் அரசாங்க சட்டத்தரணி வழக்கு தொடர்ந்திருந்தார்.

சாட்சியம் மற்றும் எழுத்து மூல சமர்ப்பணங்களென கடந்த நான்கு நாட்களாக நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, சகல குற்றச்சாட்டுகளிலுமிருந்தும் தனுஷ்க குணதிலக குற்றமற்றவரென்று வேல்ஸ் மாவட்ட நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.

இந்நிலையில், அவர் எதிர்வரும் நவம்பரில் இலங்கைக்கு வரவுள்ளதுடன், எதிர்வரும் கிரிக்கெட் போட்டிகளிலும் அவர் பங்கேற்கலாமெனவும் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

## மாகாண சபைகளிடமிருந்து...

பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"தமிழ் மக்களின் இருப்புகளை தக்க வைத்துக்கொள்வதற்கு 13ஆவது திருத்தம் செயற்படுத்தப்பட வேண்டும். இதனை கருத்திற்கொண்டு மாகாண சபைகளிடமிருந்து மத்திக்கு பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள மாகாணத்துக்கு வழங்குவது தொடர்பாகவும் நியதிச் சட்டங்களை உருவாக்குவது தொடர்பாகவும் ஜனாதிபதியுடன் பல சுற்றுச் சந்திப்புகளை மேற்கொண்டோம்.

நாம் சந்திப்புகளில் ஈடுபட்ட போது தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒன்றும் செய்ய மாட்டாரென்று சிலர் கூறினர். ஆனால், சில விடயங்களை அவரினூடாக செய்யலாமென்ற நம்பிக்கையுடன் நாங்கள் இணைந்து செயற்பட்டு வருகின்றோம்.

பறிக்கப்பட்ட மாகாண அதிகாரங்களை அவ்வாறு மீள வழங்குவது தொடர்பாகவும் நியதிச் சட்டங்களை உருவாக்குவது தொடர்பாகவும் நிபுணர் குழுவொன்றை அமைப்பதற்கும், ஜனாதிபதியுடன் இறுதியாக நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி சம்மதித்தார்.

ஜனாதிபதி வெளிநாடு சென்றதால், அந்தக் குழுவை நியமிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், அவரின் பொறுப்பை செயற்படுத்துபவர்களும் குழுவை நியமிக்கவில்லை.

13ஆம் திருத்தம் தொடர்பாக இந்தியாவும் கரிசனையாக உள்ளதுடன், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியாவும் தம்மாலான அழுத்தத்தை வழங்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிலையான அரசாங்கமொன்றின் ஜனாதிபதியாக இல்லாததால், சில விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தென்னிலங்கையை சேர்ந்த சிலர் முட்டுக்கட்டையாக உள்ளனர். அவ்வாறு முட்டுக்கட்டையாக இருப்பவர்களுடன் மாகாண அதிகாரங்களை மாகாணத்துக்கு வழங்குவது தொடர்பாக கலந்துரையாடியுள்ளோம். இனியும் கலந்துரையாடவுள்ளோம்.

ஆகவே, தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதனையாவது செய்வாரா? செய்ய மாட்டாரா? என்ற விவாதங்களை தாண்டி தமிழ் மக்களின் இருப்புகளை தக்க வைப்பதற்காக பறிக்கப்பட்ட அதிகாரங்களையாவது அவர் மூலம் பெறுவதற்குரிய நடவடிக்கைகளை தொடர்வோம்" எனத் தெரிவித்தார்.

# மலைச்சாரல்

## பாடசாலையில் மாணவன் கசிப்பு விற்பனை

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

கலவான பகுதியிலுள்ள பிரபல்ய பாடசாலையொன்றில் மாணவன் ஒருவரிடமிருந்து கசிப்பு போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன் குறித்த மாணவன் பாடசாலையில் கசிப்பு விற்பனையில் ஈடுபடுவதாகவும் தெரியவந்துள்ளது.

ஆசிரியர் இதுதொடர்பில் கலவான பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார். இதனையடுத்து மாணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட மாணவன் அப்பாடசாலையில் தரம் 9 கல்வி கற்பவன் என தெரியவந்துள்ளது.

மாணவன் தண்ணீர் கொண்டு வரும் போத்தலில் கசிப்பை எடுத்து வந்து அதனை வகுப்பிலுள்ள மாணவர்களுக்கு விற்பனை செய்து வந்துள்ளதாக கலவான பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவனின் தாயார் வெளிநாட்டில் பணிபுரிவதாகவும் தந்தை அவர்களை விட்டு பிரிந்துள்ளதாகவும் தெரியவருகின்றது. மாணவன் உறவினர் ஒருவரின் வீட்டிலிருந்தே பாடசாலைக்கு சமூகளிப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்த கசிப்பை மாணவன் கொண்டு வந்து விற்பனை செய்துள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இதன்பின்னர் இவ்வாறான செயல்களில் ஈடுபடக்கூடாது எனவும் பொலிஸார் மாணவனை எச்சரித்து விடுதலை செய்துள்ளனர்.

## சீரற்ற காலநிலை மலையக வீதிகளில் பயணிப்பது அவதானம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

சீரற்ற காலநிலை காரணமாக பலாங்கொடை பொகவந்தலாவ பிரதான வீதிகளில் பயணிப்போர் அவதானமாக வாகனத்தை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதுமட்டுமின்றி வீதிகளில் வழுக்கல் நிலை காணப்படுவதால் பாதசாரிகளும் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளனர். சாரதிகள் தமது வாகனங்களின் ஹெட்லைட்டுகளை ஒளிர விட்டுச் செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பலாங்கொடை ஹப்புத்தள மற்றும் பலாங்கொடை பொகவந்தலாவ வீதிகள் அதிகளவில் வழுக்கல் தன்மையுடன் இருப்பதுடன் வீதிகளின் இரு பக்கங்களிலும் பள்ளத் தாக்குகள் காணப்படுவதால் வாகன சாரதிகள் இரட்டிப்பு அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## இரத்தினபுரி மாவட்டத்தில் 74 பாடசாலைகள் மூடப்படும் அபாயம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**



இரத்தினபுரி மாவட்டத்தில் ஐம்பதுக்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்கும் 74 பாடசாலைகள் மூடப்படும் அவதான நிலைமை ஏற்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட இணைப்பு குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பாடசாலைகளால் அரச வளங்கள் வீணடிக்கப்படுவதாகவும் இதனால் இவை தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அண்மையில் (27) நடைபெற்ற இரத்தினபுரி மாவட்ட இணைப்புக் குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கிணங்க 50 மாணவர்களுக்கும் குறைவான 74 பாடசாலைகள் இம் மாவட்டத்தில் காணப்படுவதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் இங்கு பலரும் கருத்துக்களை முன்வைத்தனர். இப்பாடசாலைகளில் மாணவர்கள் தொகை 50 ற்கு குறைவாகவிருந்த போதிலும் அநேகமான பாடசாலைகளில்10 இற்கும் அதிகமான ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். அதுமட்டுமின்றி இவற்றில் அநேகமான கட்டடங்கள், வளங்கள் வீணடிக்கப்படுவதாகவும் பலரும் கருத்து தெரிவித்தனர்.

எனினும் இவ்வாறான பாடசாலைகளை மூடி மாணவர்களை அண்மித்த வசதியான பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கு முன்னர் பொருளாதார குடும்ப நிலைமைகளை கருத்திற் கொள்ள வேண்டுமெனவும் இணைப்புக் குழுவின் தலைவரும் இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான அகில எல்லாவள தெரிவித்தார்.

இறுதியில் அனைவரின் ஏகோபித்த கருத்துக்கு இணங்க இப்பாடசாலைகள் மற்றும் இவற்றில் கல்வி கற்கும் மாணவர்கள் தொடர்பிலான தகவல்களை திரட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

## களுகங்கை நீர்மட்டம் அதிகரிப்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

களுகங்கையின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இரத்தினபுரி மாவட்ட காரியாலயம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் களுகங்கையின் கிளை ஆறுகளில் ஒன்றான குடாகங்கையின் இரு மருங்கிலும் தாழ் நிலங்களில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை இப்பகுதிக்கு 100 மில்லி வீற்றருக்கும் அதிகமான மழை பெய்து வருவதால் இப்பகுதித்துணை வீதிகளில் வெள்ளம் ஏற்படும் அவதானம் நிலவுவதால் வாகன சாரதிகள் அவதானமாக இருக்குமாறும் இவ் விடயமாக இடர் முகாமைத்துவ அமைச்சின் பிரிவுகள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தடைசெய்யப்பட்ட சிகரட்டுகளை விற்பனை செய்த இருவர் கைது

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பலாங்கொடை கல்தோட்டப் பிரதேசத்தில் தடை செய்யப்பட்ட வெளிநாட்டுச் சிகரெட்டுகளை விற்பனை செய்த இரு வியாபார நிலைய உரிமையாளர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து சட்டவிரோதமாக விற்கப்பட்டு வந்த சிகரட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக விசாரணை நடத்தி வரும் பொலிஸார் தெரிவித்தனர்.



நுவரெலியா பெரண்டினா நிறுவனத்தால் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 52 குடும்பங்களுக்கு தலா 3500 ரூபா வீதம் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட, பெரண்டினா மைக்ரோ இன்வெஸ்ட்மெண்ட், நுவரெலியா மாவட்ட முகாமையாளர் கயான் மற்றும் நுவரெலியா பெரண்டினா அபிவிருத்தி பிரிவு முகாமையாளர் சிவகாந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (படம்: தலவாக்கலை குறூப் நிருபர்

## குளவிக் கொட்டுக்கு இலக்காகி 7 பேர் பாதிப்பு



**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

திம்புள பத்தனையில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி 7 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மதியம் தேயிலை மலையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த போதே தொழிலாளர்களை குளவிக் கொட்டியுள்ளது. இதனால் 7 பேர் பாதிக்கப்பட்டு தற்சமயம் கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக திம்புள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டகலை பகுதியில் உள்ள கிரேக்லி தோட்டத்தைச் சேர்ந்த 7 பெண் தொழிலாளர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த போதே தேயிலை செடிகளின் கீழ் பகுதியில் இருந்த குளவிக்கூடு கலைந்து கொட்டியுள்ளதாக தெரியவருகிறது.

மலையகத்தில் தொடர்ச்சியாக இவ்வாறான செயல்கள் இடம்பெற்றுவருவதாக பொதுமக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

## உள்நாட்டு துப்பாக்கி மீட்பு

**கம்பளை நிருபர்**

கம்பளை விசேட அதிரடி படையினர் குறுந்துவத்த ராக்சாவ பிரதேசத்தில் வீடொன்றில் மறைத்து வைத்திருந்த உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றை மீட்டுள்ளனர்.

கம்பளை குறுந்துவத்த ராக்சாவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை கம்பளை விசேட அதிரடி படையினர் இச்சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதில் டி 56 பாவிக்கக் கூடிய துப்பாக்கியொன்றும் தோட்டாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கி மிருக வேட்டைக்காக பயன்படுத்தப்பட்டிருக்கும் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

38 வயதுடைய நபரொருவரே இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கம்பளை குறுந்துவத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வடமாகாண உற்பத்திகளை சந்தைப்படுத்தும் மாபெரும் சுற்றுலாக் கண்காட்சி





**பருத்தித்துறை விசேட நிருபர்**

வடமாகாண சுற்றுலாப் பணியகம், தொழிற்துறை திணைக்களத்தின் எற்பாட்டில் உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வடமாகாண உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் சுற்றுலாக் கண்காட்சி யாழ். மத்திய கலாசார மையத்தில் நேற்று நடைபெற்றது.

வடமாகாண சுற்றுலா பணியக தலைவர் ஆ.பத்திநாதன் தலைமையில் இக்கண்காட்சி நடைபெற்றது.

மாறிவரும் சுற்றுலா வளர்ச்சியில் வடமாகாண உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் வகையில் இக்கண்காட்சி அமைந்துள்ளதாக வடமாகாண சுற்றுலா பணியக தலைவர் ஆ.பத்திநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் கலந்துகொண்டு கண்காட்சி கூடங்களை அங்குராப்பணம் செய்துவைத்தார்.

இக்கண்காட்சியில் 43 உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்தி பொருட்களின் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இதில் 18 உணவுச் சார்ந்த பொருட்களும்,25 கைவினை சார்ந்த உற்பத்தி பொருட்களும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வடமாகாண தொழிற்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், மற்றும் உள்ளிட்ட துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# வடக்கின் உதயம்

## வவுனியாவில் பனைசார் பொருட்கள் உற்பத்தி கண்காட்சி



**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் பனைசார் பொருட்கள் உற்பத்தி கண்காட்சி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பனை அபிவிருத்தி சபையின் அனுசரணையோடு வவுனியாவில் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு பனைசார் பொருட்கள் உற்பத்தி பயிற்சி நடைபெற்றிருந்தது.

கண்காட்சி நெளுக்குளத்திலுள்ள பயிற்சி நிலையத்தில் நடைபெற்றதுடன், இந்நிகழ்வில் பனை அபிவிருத்தி சபை தலைவர் கிருஷாந்த பத்திராஜ கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது மரநடுகை மற்றும் பனம் விதை, நாற்று நடுகை போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிகள்

**ஓமந்தை விசேட நிருபர்**

அவுஸ்திரேலியன் தமிழ் யூனியன் (Australian Tamil Union) அமைப்பினால் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் நகரில் இயங்கிவரும் உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட அமைப்புக்கான மருத்துவ அவசர ஊர்தி வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி கேட்போர் கூடத்தில் அண்மையில் (27) நடைபெற்றது

அவுஸ்ரேலியன் தமிழ் யூனியன் (Australian Tamil Union) அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் தவராசா காண்டீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவுஸ்ரேலியன் தமிழ் யூனியன் (Australian Tamil Union) அமைப்பின் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டு மருத்துவ அவசர ஊர்தியை உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட அமைப்பினரிடம் கையளித்தனர்



## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 100 வருட பூர்த்தி விழா

கோப்பாய் ஆசிரிய கலாசாலை நிறுவப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு கல்லூரித் தினவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராகவும் கலாசாலையின் முன்னாள் அதிபர்களான வே.கா. கணபதிப்பிள்ளை, வீ. கருணலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர் சாந்தினி வாகீசன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

மேலும் இந்நிகழ்வில் கலாசாலையின் ஓய்வுநிலை பிரதிமுதல்வர் பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு எழுதிய வடக்கின் ஆசிரிய கலாசாலைகள் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பற்றிய சிறப்பாய்வு என்ற நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

அத்துடன் விரிவுரையாளர் தர்சினி முத்துராஜாவை பிரதம ஆசிரியராகக் கொண்ட கலாதீபம் மாத இதழின் கல்லூரித்தின சிறப்புப் பிரதியும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சமயத் தலைவர்களின் ஆசியுரை, நூற்றாண்டைக் குறிக்கும் முகமாக 100 நிறைகுடங்கள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களுடனான ஊர்வலம், என்பன நடைபெறவுள்ளதாகவும் கலாசாலையின் பழைய மாணவர்களை நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறும் நூற்றாண்டு விழா ஏற்பாட்டுக்குழுவினர் அழைத்துள்ளனர்.

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2023 செப்டெம்பர் 30 சனிக்கிழமை

ஆசிய விளையாட்டுப் போட்டி:

# 400 மீற்றர் ஓட்டத்தில் நதீஷாவுடன் காலிங்க, அருண இறுதிக்குத் தகுதி

***சீனாவிலிருந்து நிரோஷான் பிரியங்கர***



சீனாவின் ஹான்சோ நகரில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டுப் போட்டியின் பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு இலங்கையின் நதீஷா ராமநாயக்க தகுதி பெற்றுள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டியின் மெய்வல்லுனர் போட்டிகள் நேற்று (29) ஆரம்பமானது. இதில் ஆரம்ப சுற்றில் பங்கேற்ற நதீஷா ராமநாயக்க 52.67 வினாடிகளில் போட்டித் தூரத்தை நிறைவு செய்து இரண்டாவது இடத்தை பெற்றார்.

பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியின் ஆரம்ப சுற்றில் இரண்டு போட்டிகள் நடைபெற்றதோடு இதில் நதீஷா ஒட்டுமொத்த 18 வீராங்கனைகளில் 3ஆவது இடத்தை பிடித்தார்.

இதில் முதலிடம் பிடித்த பஹ்ரைன் வீராங்கனை ஒலுவ கெமி முஜிதத் 50.53 வினாடிகளில் போட்டியை நிறைவு செய்தார். இதன் இறுதிப் போட்டி இலங்கை நேரப்படி இன்று (30) மாலை 5.30க்கு இடம்பெறவுள்ளது.

இதேவேளை நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியின் ஆரம்ப சுற்றில் பங்கேற்ற காலிங்க குமாரகே 45.57 வினாடி போட்டியை நிறைவு செய்து முதலாம் இடத்தை பிடித்தார். மற்றொரு ஆரம்ப சுற்று போட்டியில் பங்கேற்ற அருண தர்ஷன 46.07 விநாடிகளில் போட்டித் தூரத்தை நிறைவு செய்து மூன்றாவது இடத்தை பிடித்தார்.

இதில் ஒட்டுமொத்த வீரர்களான 22 வீரர்களில் மூன்றாவது இடத்தை காலிங்க குமார பிடித்ததன் மூலம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார். அதேபோன்று அருண 8 ஆவது இடத்தை பிடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இதனிடையே கொல்ப் போட்டியில் இரண்டாவது சுற்றில் நடராஜ் தங்கராஜ் 141 புள்ளிகளுடன் 36 ஆவது இடத்தை பெற்றிருப்பதோடு, அநுர ரோஹன மற்றும் மிதுன் பெரேரா தலா 145 புள்ளிகளையும் கே. பிரபாகரன் 150 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

அணிகள் பிரிவில் இலங்கை அணி 13 ஆவது இடத்தில் இருப்பதோடு அந்த அணி 431 புள்ளிகளை பெற்றுள்ளது. அவர்கள் நேற்று முன்தினம் 213 புள்ளிகளை பெற்றதோடு நேற்று மேலும் 218 புள்ளிகளை பெற்றனர். இந்த போட்டிகளில் இன்று ஒற்றையர் மற்றும் அணிகளின் இரண்டாவது சுற்று போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பதற்காக சஹன் ஆரச்சிகே தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி நாளை (01) சீனா வரவுள்ளது. இலங்கை கிரிக்கெட் போட்டியில் காலிறுதிப் போட்டியில் இருந்தே பங்கேற்கவுள்ளது. இலங்கை அணியின் காலிறுதிப் போட்டி வரும் ஒக்டோபர் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியின் 6 ஆவது நாளான நேற்று சீனாவின் தங்கப் பதக்க எண்ணிக்கை 100ஐ நெருங்கி முதல் இடத்தில் உள்ளது. தென் கொரியா பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்திலும் ஜப்பான் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

9 ஆண்டுகளின் பின் வெள்ளிப் பதக்கம் ஒன்றை வென்ற இலங்கை பதக்கப் பட்டியலில் தற்போது 25ஆவது இடத்தில் உள்ளது.

## டொக்டர் ஏ.எம்.ஏ. அஸீஸ் வெற்றிக் கிண்ணம் இன்று

***ருஸைக் பாறுக்***



அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க பேரவை ஏற்பாடு செய்துள்ள டொக்டர் ஏ.எம்.ஏ. அஸீஸ் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்ட போட்டி இன்று (30) மற்றும் நாளைய தினங்களில் திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு தெமட்டகொடையிலுள்ள பேரவையின் தலைமைக் காரியாலய கேட்போர் கூடத்தில் பேரவையின் தலைவர் இஹ்சான் ஏ ஹமீட் தலைமையில் நடைபெற்றது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் திருகோணமலை மாவட்ட பணிப்பாளர் எம்.எம்.முக்தார், திருகோணமலை கிளைகள் மற்றும் பேரவை ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் நாடளாவிய ரீதியிலுள்ள கிளைகளுக்கிடையே நடைபெறவுள்ள டொக்டர் ஏ.எம்.ஏ. அஸீஸ் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டம் தொடர்பாக அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவைத் தலைவர் இஹ்சான் அஹமட் ஹமீட் கலந்து கொண்டு விளக்கமளித்தார்.

இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் பேரவை தேசிய பொருளாளர் டீ.டி.எம். பிர்தௌஸ், தேசிய பொதுச் செயலாளர் ஆசிப் சுக்ரி, பேரவையின் ஊடகப் பொறுப்பாளரும் கொழும்பு டைம்ஸ் இணையத்தள பிரதம ஆசிரியருமான மொஹமட் றசூல்டீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஆசிய விளையாட்டுப் போட்டி:

## இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியினர் நாடு திரும்பினர்



சீனாவின் ஹான்சோ நகரில் நடைபெற்று வரும் 19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியின் மகளிர் கிரிக்கெட்டில் வெள்ளிப் பதக்கம் வென்ற இலங்கை அணி நேற்று கட்டுநாயக்க விமானநிலையத்தின் வழியாக நாடு திரும்பியது.

ஆசிய கிண்ண மகளிர் கிரிக்கெட்டில் இறுதிப் போட்டி வரை முன்னேறிய இலங்கை மகளிர் அணி இறுதிப் போட்டியில் இந்தியாவிடம் தோல்வியை சந்தித்தது. இந்நிலையில் இலங்கை திரும்பிய அணியின் தலைவி சமரி அத்தபத்து ஊடகங்களுக்கு கருத்துக் கூறும்போது,

"இந்த வெற்றி தொடர்பில் எனக்கு பெரு மகிழ்ச்சியாக உள்ளது. இந்த ஆண்டு எமக்கு சிறந்த ஆண்டாக உள்ளது. நாம் இங்கிலாந்தை வீழ்த்தி டி20 தொடரில் வெற்றியீட்டினோம். தவிர பங்களாதேஷ் மற்றும் நியூசிலாந்து அணிகளையும் தோற்கடித்தோம்.

உலகக் கிண்ணத்தை வெல்வதே எமது அடுத்த எதிர்பார்ப்பாகும். எமது பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு சிறந்த மட்டத்தில் உள்ளது. துடுப்பாட்டத்தையும் மேம்படுத்தி சரி செய்ய வேண்டும். அதன்மூலம் எமக்கு உலகக் கிண்ணத்தை வெல்ல முடியும்" என்றார்.

இம்முறை ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை இதுவரை வென்ற ஒரே பதக்கமாக கிரிக்கெட் அணியின் இந்த வெள்ளிப் பதக்கம் உள்ளது.

## உலகக் கிண்ணத்திற்கான இந்திய அணியில் அஸ்வினுக்கு அழைப்பு



உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய குழாத்தில் அனுபவ சுழல் பந்துவீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் இணைக்கப்பட்டுள்ளார் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ணத் தொடருக்கான குழாத்தை உறுதிசெய்வதற்கான இறுதி திகதியான நேற்று முன்தினம் (28) இந்திய அணியானது ஒரு மாற்றத்தை மேற்கொண்டுள்ளது.

ஆசியக் கிண்ணத் தொடரின் பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியின் போது அக்ஷர் படேல் உபாதைக்கு முகங்கொடுத்திருந்தார். இதன் காரணமாக அவர் அடுத்தடுத்த போட்டிகளில் விளையாடவில்லை என்பதுடன், அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரிலிருந்து முழுமையாக நீக்கப்பட்டார்.

அக்ஷர் படேல் அணியிலிருந்து நீக்கப்பட்ட நிலையில், அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரின் முதல் 2 போட்டிகளில் ரவிச்சந்திரன் அஸ்வின் இணைக்கப்பட்டார். இரண்டாவது போட்டியில் 3 விக்கெட்டுகளை வீழ்த்திய அவர் மொத்தமாக 4 விக்கெட்டுகளை சாய்த்திருந்தார்.

இவருடைய பந்துவீச்சு பிரகாசிப்பு மற்றும் அக்ஷர் படேலின் உபாதை காரணமாக அஸ்வின் உலகக் கிண்ணத் தொடருக்கான குழாத்தில் இடம்பிடித்துள்ளார்.

ரவிச்சந்திரன் அஸ்வின் இந்திய அணிக்காக கடந்த 2 உலகக் கிண்ணங்களில் விளையாடியுள்ளார். அவர் 2011ஆம் ஆண்டு மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் விளையாடியிருந்ததுடன், 2019ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரிலிருந்து நீக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகக் கிண்ணத்திற்கு முன்னரே ஓய்வு முடிவை அறிவித்தார் ஷகீப்



பாகிஸ்தானில் நடைபெறும் சம்பியன்ஸ் கிண்ண தொடருக்குப் பின் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற உள்ளதாக பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் ஷகீப் அல் ஹசன் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு சம்பியன்ஸ் கிண்ண தொடர் நடைபெறவுள்ளது. இந்த தொடருக்குப் பின்னர் தனது சர்வதேச கிரிக்கெட் ஓய்வு முடிவை அறிவிப்பேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் 2024 டி20 உலகக் கிண்ணத்திற்குப் பின் டி20 போட்டிகளில் ஓய்வு முடிவை அறிவிக்க இருப்பதாக குறிப்பிட்ட ஷகீப் அல் ஹசன் டெஸ்ட் போட்டிகளில் விரைவில் தனது ஓய்வை அறிவிக்கவுள்ளதாக கூறினாரர்.

"நான் அனைத்து வடிவிலான போட்டிகளிலும் ஒன்றன்பின் ஒன்றாக ஓய்வு பெறுவேன். எனது ஓய்வு முடிவை 2025 ஆம் ஆண்டு சம்பியன் கிண்ண தொடருக்குப் பின் அறிவிப்பேன். இந்த உலகக் கிண்ண தொடர் வரை மட்டுமே நான் பங்களாதேஷ் அணியின் தலைவராக செயல்படுவேன். அதன்பின் தலைமை பொறுப்பில் இருக்க மாட்டேன்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகக் கிண்ணத் தொடரில் பங்களாதேஷ் வரும் ஒக்டோபர் 7 ஆம் திகதி தனது முதல் போட்டியில் ஆப்கானிஸ்தானை எதிர்த்து விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலகக் கிண்ணத்தின் ஆரம்ப போட்டி: வில்லியம்சன் இல்லை



முழங்கால் அறுவைச் சிகிச்சையில் இருந்து மீண்டு வரும் நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன் ஒருநாள் உலகக் கிண்ணத்தில் இங்கிலாந்துக்கு எதிரான முதல் போட்டியில் பங்கேற்க மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான பயிற்சிப் போட்டியில் சிறப்பு துடுப்பாட்ட வீரராக மாத்திரம் ஆடிய வில்லியம்சன் தென்னாபிரிக்காவுக்கு எதிரான எதிர்வரும் திங்கட்கிழமை திருவனந்தபுரத்தில் நடைபெறவுள்ள இரண்டாவது பயிற்சிப் போட்டியில் களத்தடுப்பு மற்றும் துடுப்பாட்டம் இரண்டிலும் பங்கேற்க திட்டமிட்டுள்ளார்.

"கேன் போட்டிகளுக்கு திரும்புவது தொடர்பில் ஆரம்பம் தொடக்கம் நாம் நீண்ட கால திட்டம் ஒன்றை முன்னெடுத்திருக்கிறோம்" என்று நியூசிலாந்து தலைமை பயிற்சியாளர் கரி ஸ்டீட் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல் போட்டியின் போது உபாதைக்கு உள்ளான வில்லியம்சன் ஆறு மாத ஓய்வுக்கு பின்னரே அணிக்குத் திரும்பியுள்ளார்.

வில்லியம்சன் இல்லாத நிலையில் எதிர்வரும் ஒக்டோபர் 5 ஆம் திகதி அஹமதாபத்தில் இங்கிலாந்துக்கு எதிரான உலகக் கிண்ணத்தின் முதல் போட்டியில் நியூசிலாந்து அணிக்கு டொம் லதம் தலைவராக செயற்படவுள்ளார். பயிற்சிப் போட்டியிலும் லதமே நியூசிலாந்து அணியின் தலைவராக செயற்படுகிறார்.

## அக்கரைப்பற்று ஹிஜ்ரா வெற்றி

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



பிரிட்டிஷ் ஒக்ட்ரீ கெம்பஸின் ஏற்பாட்டில் பிரிட்டிஷியன் சம்பியன் கிண்ண ஒருநாள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று ஹிஜ்ரா விளையாட்டு கழகம் கிண்ணத்தை வென்றது.

14 அணிகள் பங்குபற்றிய இச்சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (26) நடைபெற்றது. இறுதிப்போட்டியில் அக்கரைப்பற்று ஹிஜ்ரா அணியும், பள்ளிக்குடியிருப்பு றஹ்மிய்யா அணியும் மோதியதில், அக்கரைப்பற்று ஹிஜ்ரா அணி தொடரின் சம்பியனாக தெரிவானது.

இத்தொடரின் சிறப்பாட்டக்காரராக றஹ்மிய்யா அணியின் சகலதுறை வீரரான ஹுஸ்னி தெரிவுசெய்யப்பட்டார்.